செந்தமிழ்ச் செல்வி

3

உள்ளுறை

சிலம்பு-௫௨] வள்ளுவர் ஆண்டு ௨௦௧௦, சித்திரை May, 79 [பரல்-௧

'செந்தமிழ்ச் செல்வி'

(செந்தமிழ்த் திங்கள் வெளியீடு)

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

"செந்தமிழ்ச் செல்வி"

ஆண்டுக் கையொப்பம்

(Subscription Rates)

உள்நாடு ரூ. 12 00	வெளிநாடு ரூ. 20 00

ஆயுள் கையொப்பம்

உள்நாடு ரூ. 120 00	வெளிநாடு ரூ. 200 00

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு ருரு	திருவள்ளுவர் ஆண்டு உ௰௰, சித்திரை மே 1979	பரல் ௬

கழகத்தின் நோக்கமும், அதனை நிறைவேற்றக் கழகம் வெளியிட்ட அறிக்கைகளும்

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் ஒரு கூட்டுப் பங்கு நிறுவனமாக 1920இல் உயர்ந்த குறிக்கோளுடன் தோற்றுவிக்கப் பட்டது. கழக அமைச்சர் அண்ணல் திருவரங்கனுர் அவர்களும், கழகத் தொடக்கமுதல் சென்னைக் கிளை முகவராக இருந்து திருவரங்கனுர் மறைவிற்குப் (1944) பின் ஆட்சிப் பொறுப்பேற்ற செந்தமிழ்ச் செல்வர் திரு. வ. சுப்பைபா அவர்களும் இந் நிறுவனத்தின் வளர்ச்சியிலேயே தம் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டு வந்துள்ளனர்.

கழகம் ஒரு நூற்பதிப்பு நிறுவனமே யாயினும் வணிகத்தையே முதன்மையாகக் கொண்டு எந் நூல்களையேனும் பதிப்பிட்டு விற்பனை செய்து பொருள் திரட்டுவதையே நோக்கமாகக் கொண்டதன்று. மொழி, இனம், நாடு எனும் அடிப்படையில் செந்தமிழும் சிவநெறியும் ஆகிய இரண்டையுமே கண்ணாகக் கொண்டு பல்வேறு சீர்திருத்தப் பணிகளிலும் முன்னேற்ற முயற்சிகளிலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது.

கழக அமைச்சராய் விளங்கிய அண்ணல் திருவரங்கனுர் அவர்கள் கழகந் தொடங்கிய காலத்திலேயே கருத்துப் பரப்புதலுக்கு ஓர் இதழும், கருத்துறு விழுமிய நூல்களைத் தேடித் தொகுத்தும் பேணிக்காத்தும் ஆராய்ச்சியாளர்கட்குப் பயன்படும் வண்ணம் வழங்குதற்கு ஒரு நூல்நிலையமும் நடத்துதல் வேண்டுமென்று திட்டமிட்டிருந்தனர்.

செந்தமிழ்ச் செல்வி என்னும் பெயரில் 1923இல் ஆசிரியர் மறைத்திரு மறைமலையடிகளார் அவர்களின் மாணவ மணிகளுள் ஒருவரான மணி திருநாவுக்கரசு அவர்களை ஆசிரியராகக் கொண்டு திங்கள் இதழ் ஒன்று தொடங்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. கடந்த அரை நூற்றுண்டுக் காலத்தில் தமிழ் நாட்டில் மொழி இன நாட்டு எழுச்சியும் வளர்ச்சியும் பற்றிய குறிப்புக்கள் அனைத்தையும் தாங்கிய களஞ்சியமாகவும் அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளின் நிலைக்களமாகவும் செல்வியின் தொகுதிகள் விளங்கி வருகின்றன. புலவர் பெருமக்கள் பலருடைய வரலாற்றையும் படங்களையும் செல்வி வெளிப்படுத்தியுள்ளது. சிவநெறிக்கோ செந்தமிழுக்கோ தமிழினத்துக்கோ தமிழ் நாட்டுக்கோ ஊறுநேரும் சூழல் அமையும் போதெல்லாம் செல்வி உறுதியும் தெளிவும் வாய்ந்த கொள்கைகளின் அடிப்படையில் உரத்து முழங்கி எதிர்த்துப் போராடியுள்ளது.

கழகந் தொடங்கு முன்னமிருந்தே திருவரங்கனுர் அவர்கள் அரிய நூல்களை விலைகொடுத்து வாங்கித் தொகுத்து வந்தார்கள். அவர்கள் எண்ணப்படி நெல்லையில் **சிவஞான முனிவர் நூல்நிலையம்** 1927 ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. மறைத்திரு மறைமலையடிகளார் அவர்களின் விருப்ப ஆவணத்தில் கண்டபடி அவர்களுடைய **மணிமொழி நூல்நிலையம்** சென்னையில் **மறைமலையடிகள் நூல்நிலையம்** என்னும் பெயரில் 1958இல் நிறுவப்பட்டு மிகப்பெரிய அரிய நூல் நிலையமாக வளர்ந்து பெருகி விளங்கி வருகின்றது. பல்லாவரம் பொதுநிலைக் கழக மாளிகையில் அமைந்துள்ள மறைமலையடிகள் கலை மன்றத்திலும் ஒரு நூலகமும் 1962 முதல் கழகச் சார்பில் நடைபெற்று வருகின்றது. உலகில் வேறு எந்த நூற்பதிப்பு நிறுவனமும பொது நூலகங்கள் நடத்துவதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உயர்திரு. வ. உ. சிதம்பரனரின் உள்ளங் கவர்ந்த ஆங்கிலப் பேரறிஞரான ஜேம்சுஆலன் அவர்களின் நூல்களுள் சிலவற்றைத் தமிழில் பெயர்த்து வெளியிட்டிருப்பதோடு, ஆங்கில மூலவடிவிலேயே அவையனைத்தையும் அரிதின் முயன்று தேடிப் பெற்றுக் கழகம் வெளியிட்டுள்ளது.

கழகம் ஒரு நூற்பதிப்பு நிறுவனம் மட்டுமன்று. அஃது ஒரு பொதுநலப்பணி நிறுவனமுமாகும். பாளையங்கோட்டையில் ஆயிரத்தம்மனுக்கு 12 ஆண்டுக் கொரு முறை எருமைக் கடாவை வெட்டிக் காவுகொடுக்கும் கொடிய வழக்கம் நெடுங்காலமாக நிலவி வந்தது. 1938ஆம் ஆண்டில் அமைச்சர் திருவரங்கனுர் அவர்களின் அருமுயற்சியால் அது தடுத்து நிறுத்தப்பட்டது. தமிழ்

நாட்டில் வானம் பொய்த்து வற்கடம் சூழ்ந்து மக்களும் மன்னுயிர்களும் அல்லலுற்றுக்கொண்டிருந்த நிலையில் கழகத்தின் நன் முயற்சியால் 'மழை வேண்டல்', 'மழையே வா' என்னும் நூல்களை வெளியிட்டு ஓதுவார்களைக் கொண்டு வழிபாடும் நிகழ்த்தப்பட்டது. அவ் வழிபாடு முடிந்தவுடன் மழைபொழிந்ததென்பது குறிப்பிடத் தக்கது. 1924 ஆம் ஆண்டிலேயே கழக அமைச்சர் திருவரங்கனுர் அவர்கள் வான்மழை வேண்டி நெல்லைத் திருக்கோயிலில் மழை முழுக்கு (தாராபிஷேகம்) நிகழ்த்தியுள்ளனர்.

தமிழ்நாட்டின் வட வெல்லைப் போராட்டம் கிளர்ந்தெழுந்த போது கழகம் அறிஞர் பலரின் கருத்துக்களை வேண்டிப் பெற்று வெளியிட்டது; அம் முயற்சியில் ஈடுபட்டிருந்த திரு. மங்கலங் கிழார்க்குப் பல்லாற்ருனும் உதவியும் ஒத்துழைப்பும் செய்தது.

ஏறத்தாழ ஆயிரத்து எழுநூறு நூல்களை வெளியிட்டும் புலவர் பெருமக்களின் வரலாறுகளையும், உருவப் படங்களையும், கடிதங் களையும் தொகுத்தும் இலக்கிய மாநாடுகள் கூட்டியும், பாராட்டு விழாக்கள் நடத்தியும், நூற்காட்சி, திருக்கோயிற் படக்காட்சிகள், சிறப்பு நூற்காட்சிகள் அமைத்தும், இரங்கற் கூட்டங்கள் நடத்தியும் கழகம் மேற்கொண்ட முயற்சிகள் எண்ணில.

இந்தி கட்டாயப் பாடமாக முதன்முதலில் தமிழ்நாட்டில் புகுத்தப்பட்ட அந்நாள்தொட்டு இன்றுகாறும் அதன் வல்லாண் மையை முறியடித்தற்குக் கழகம் மேற்கொண்ட முயற்சிகள் ஏராளம். மறைமலையடிகளார்தம் 'இந்தி பொது மொழியா ?' என்னும் தமிழ்நாலும் Can Hindi be a Lingua Franca of India என்னும் ஆங்கில நூலும் பற்பல பதிப்புக்கள் வெளியிடப்பட் டுள்ளன. செந்தமிழ்ச் செல்வியின் எத்தனையோ பக்கங்கள் இந்தி எதிர்ப்புக் கருத்துக்களையும் அது தொடர்பான வரலாற்று நிகழ்ச்சி களையும் தாங்கி வெளிவந்திருக்கின்றன. இந்தியெதிர்ப்புத் தொடர் பாகக் கழகம் வெளியிட்ட துண்டறிக்கைகளும், வெளியீடுகளும் பலவுள.

தமிழ்நாட்டில் தமிழே ஆட்சிமொழியாகவும் பயிற்று மொழி யாகவும், வழிபாட்டு மொழியாகவும் அறமன்ற மொழியாகவும் மற்றும் பல்துறையிலும் விளங்கவும் வழங்கவும் வேண்டும் என்னும் நோக்கொடு, 'எங்கும் தமிழ், எதிலும் தமிழ்' என்னுங் கொள் கையைக் கடைப்பிடித்துக் கழகம் பற்பல நூல்களை வெளியிட்டு வருகின்றது ; செல்வியிலும் தொடர்ந்து எழுதி வருகின்றது. இன்றியமையா அறிக்கைகள் முதலியவற்றைத் தனிப்படியாகவும் அச்சிட்டு வழங்கி வருகின்றது. இவை மட்டுமன்றித் துண்டு

வெளியீடுகளாகவும் பற்பலவற்றை வெளியிட்டுள்ளது. இத்தகைய அறிக்கைகள், துண்டு வெளியீடுகள் ஆகியன முறையாகத் தொகுக்கப்பட்டு இரு தொகுதிகளாக அமைக்கப்பட்டுள்ளன.

தமிழின்மாட்டு நெஞ்சார்ந்த பற்றில்லாத ஒரு கூட்டத்தார் 1934 இல் 'தமிழன்பர் மாநாடு' என்னும் பெயரில் ஒரு மாநாட்டினைக் கூட்டினர். அதில் கலந்து கொள்ளுமாறு மறைத்திரு மறைமலையடிகளார் அவர்கட்குக் கடிதங்களும், தொலைவரியும் (Telegram) வேண்டுகோள்களாக அனுப்பப்பட்டன. அம் மாநாடு தமிழுக்கு இழுக்கு நேருமாறு ஒருசிலரால் உள்முக நோக்கொடு நடத்தப்படுவது அறிந்து தாம் அம் மாநாட்டில் கலந்துகொள்ள இயலாதென்று அடிகளார் அவர்கள் மறுத்துவிட்டார்கள். இச் செய்தி செல்வியில் வெளிவந்துள்ளது; தனிப்படியாகவும் வெளியிடப்பட்டுள்ளது.

1933இல் பெரும் பேராசிரியர் பண்டிதமணி கதிரேசன்செட்டியார் அவர்கள் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற திராவிட பாஷாபிவிருத்தி சங்கத்தின் 11 ஆவது ஆண்டு விழாவில் 'தென்னிந்தியாவிலுள்ள பிராமணர் ஒரு வகுப்பாராகவே இருந்து தமிழைத் தாழ்த்தியடக்கியும் சமற்கிருதத்தை ஆதரித்துயர்த்தியும் வருகின்றனர்' எனவும், 'சென்னை, அண்ணாமலை என்னும் இரு பல்கலைக்கழகங்களினும் பிராமணர் வலுத்த கட்சியாய் இருந்து அத்துணை வலுவாகத் தமிழுக்குத் தடைசெய்து வருவதால் தமிழர்கள் தங்கள் தாய்மொழியின் நிலையினை உயர்த்துதற்கு, ஒன்றுமே செய்துகொள்ள முடியாதவராகின்றனர்' எனவும் தாம் பட்டறிவிற் கண்டதை உள்ளபடியே கூறியுள்ளார். இச் செய்தி யாழ்ப்பாணம்இந்துக் கல்லூரி சமற்கிருதப் பேராசிரியர் திரு. என். நாராயணன், பி.ஏ., பி.எல்.,எல்.டி. அவர்கள், சென்னை வழக்கறிஞர் திரு. எஸ். சத்தியமூர்த்தியவர்கட்கு எழுதிய கடிதத்தாலும், பின்னவர் எழுதிய மறுமொழியாலும் அறியக் கிடக்கின்றது.

பரோடா மன்னர் மாண்புசால் சயாஜிராவ் கெய்க்வார் ஜீ.சி. எஸ்.ஐ., எல்.எல்.டி. அவர்கள் மராத்தியிலும் ஆங்கிலத்திலும் பெரும்புலமை வாய்ந்தவர். அவர் 1915 சூலையில் திருக்குற்றாலம் வந்தபோது திருவாளர் டி. பொன்னம்பலம் பிள்ளை எம்.ஆர். ஏ.எஸ். அவர்கள் (ஓய்வுபெற்ற தீர்வைத்துறை ஆணையாளர், திருவாங்கூர்) பரோடா அமைச்சர் திரு. மாதவராவ் அவர்கள் வழி மேன்மைசால் மன்னர் அவர்களைக் கண்டு அளவளாவியுள்ளார். தொல்காப்பியத்தை மராத்தியில் மொழிபெயர்த்து வெளியிடுமாறு வேண்டிக்கொண்டனர். பொன்னம்பலம் பிள்ளைவழித் தொல்காப்பியத்தின் பெருமையை யறிந்த பரோடா மன்னர் அவர்கள்

மகாராட்டிர மாநில மொழியாகிய மராத்தியில் வெளியிடுவதைவிட உலகப் பொதுமொழியாகிய ஆங்கிலத்திலேயே வெளியிடலா மென்று கூறிப் பொருளுதவி செய்ய முன்வந்து செலவுத்திட்டம் அனுப்பச் சொல்லியுள்ளனர். பொன்னம்பலனுர் அவ்வாறே செலவுத்திட்டம் அனுப்பியதோடு ஆங்கில மொழிபெயர்ப்புக்கு இரு மொழிப் புலமை ஒருங்கு வாய்ந்த பல்கலைக் குரிசில் கா. சுப்பிர மணிய பிள்ளை அவர்களையும் பரிந்துரை செய்துள்ளனர். (என்ன காரணத்தாலோ இம் முயற்சி நிறைவேறவில்லை.) இச் செய்தி பொன்னம்பலனுர் பரோடா மன்னருக்கு எழுதிய கடிதத்தால் தெரிகின்றது.

1913இல் சென்னைப் பல்கலைக் கழகத்தின் ஆங்கிலப் பேராசிரி யர்கள் பல்கலைக் கழகத்தில் தமிழை ஒழித்துக் கட்டிவிட முயன் றுள்ளனர். அதுபற்றிப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரிய ராயிருந்த திருமணம் செல்வக் கேசவராய முதலியாரவர்கள் நாடகப் பேராசிரியர் திரு. பம்மல் சம்பந்த முதலியார் அவர்கட்கு எழுதிய கடிதத்தால் அறிகின்ருேம். தமிழ்ப் புலவர் பட்டம் பெறுதற்குச் சமற்கிருதம், மலையாளம் முதலிய அயல் மொழிகளில் ஒன்றைப் பயிலவேண்டும் என்னும் முறைமை இருந்து வந்தது. அதனை மாற்றுவதற்குத் தமிழறிஞர்களே தடையாயிருந்திருக்கின்றனர். இச் செய்தியைக் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கட்கு எழுதியுள்ள கடிதத்தால் அறி கின்ருேம்.

மேற்கண்டவை போலும் வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த எத்தனையோ கடிதங்கள் முதலியன கழகத்தால் தொகுத்து வைக்கப் பட்டுள்ளன; செல்வியிலும் தனிப்படியாகவும் வெளியிடப் பட்டுள்ளன.

''தமிழில் அறிவியல் மாநாடுகள் நடத்த ஆய்வுக்கூட்டம், தமிழ் நாட்டுக்கு இந்தி வேண்டுமா? தமிழ் வளர்ச்சிக்கான அறிவிப்பு, பயிற்சி மொழிபற்றி இராசாசியின் முழக்கம், Tamizh Vazhga, திருக்கோயில்களும் தமிழர் வாழ்வும், தமிழில் வழிபாடு, இருபதாம் நூற்றுண்டில் தமிழகம் தந்த சிந்தனைச் சிற்பி ஜி. டி. நாயுடு, தொல்காப்பியமும் பரோடா மன்னரும், தமிழன்பர் மாநாடும் மறை மலையடிகளும், மேலைநாடு சென்று திரும்பிய திரு. மீ. ப. சோமுவுக்கு ராபர்ட் ஆம்ஸ்ட்ராங் எழுதிய கடிதம், Dr. Zakir Hussain on Tiruvalluvar, அஞ்சல் தலையும் திருவள்ளுவரும், தமிழாசிரியர் பெருமக்களுக்குக் கழக ஆட்சியாளர் விண்ணப்பம், வீட்டுக்கொரு நூல்நிலையத் திட்டம், தமிழ்வழிப் பயில்வார்க்கு வேலைவாய்ப்பு கூடும், தந்தை பெரியார் நூற்றுண்டு விழா.''

மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை கழகம் அறிக்கைகளாகவும் துண்டு வெளியீடுகளாகவும் வெளியிட்டுள்ளனவற்றுள் சில. இவை போலும் எத்தனையோ வெளியீடுகளைக் கழகம் வெளியிட்டுள்ளது. இவற்றைப் படித்து நன்கு எண்ணிப்பார்ப்பவர்கட்குக் கழகம் எத்தனைத் துறையில் எவ்வெம் முறையில் தன் முயற்சிகளைப் படரவிட்டுள்ளது என்பது புலனாகும்.

அருந்தமிழ் இலக்கியங்கள் பலவற்றையும் வெளியிட்டுள்ள கழகம் அறிவியல் நூல்களையும் தமிழில் வெளியிட்டு வருகின்றது; மொழி, இன, நாட்டு வரலாற்று நூல்களையும் வெளியிட்டு வருகின்றது. அறிவியல் நூல் வெளியீட்டுக்கு ஒரு குழு அமைத்து முயற்சி செய்தது. அண்மையில் கெடிலக்கரை நாகரிகம், என்னும் நூல் வெளியிடப்பட்டுள்ளது. மற்றும் காவிரிக்கரை நாகரிகம், பொருநைக்கரை நாகரிகம் முதலியன வெளியிடப்படவிருக்கின்றன. அவற்றுக்கு முன்னோடியாகக் காவிரி வளம் பொருநை வளம் ஆகிய நூல்கள் வெளிவந்துள்ளன. கழகம் பல துறைகளிலும் அகர முதலிகள் வெளியிடவேண்டும் என்னும் திட்டம் வைத்துப் பற்பல அகர முதலிகளை வெளியிட்டுள்ளது. முதியோர் கல்விக்கு முதன் முதல் 1939இல் 'தானே தமிழ் கற்குமுறை' என்னும் நூலை வெளியிட்டு முயற்சி செய்துள்ளது.

அறிவியல்மேதை ஜி. டி. நாயுடு, பா. வே. மாணிக்க நாயக்கர், பல்கலைக்குரிசில் கா. சுப்பிரமணியபிள்ளை முதலியவர்களின் தனிச் சிறப்பையும் பேராற்றலையும் உணர்ந்து அவர்களைப் போற்றிப் பாராட்டியும், அவர்களுடைய பேராற்றல் மன்பதைக்குப் பயன்பட வழிவகுத்தும் கழகம் செய்த முயற்சிகள் பல. கழகத்தின் அறிமுகத்தால் பெருமை பிறங்க வாழ்ந்த, வாழ்ந்துவரும் அறிஞர்கள் பலராகவுள்ளனர்.

அருட்கவி சேதுராமன் அவர்கள் திருக்கோயில்களில் எத் திருவுருவத்தின் முன்பிலும் அவற்றுக்கு இயைய எவ்வகைப் பண்ணிலும் சரளமாகப் பாடும் தனித்திறம் வாய்ந்தவராவர். அவர் தம் ஆற்றலை வியந்து கழக ஆட்சியாளர் அவர்கள் பல கோயில் கட்கும் அவரை அழைத்துச் சென்று அருட்பாடல் பாடுவித்தனர். இந் நிகழ்ச்சியைக் கண்டும் கேட்டும் அமைச்சர்கள் நடுவர்கள் முதலிய பெருமக்கள் பலர் வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தனர்.

திருக்குறள் நினைவுக்கலை வல்லார் திரு. சுப்பிரமணியதாசு அவர்களின் மகன் 11 அகவைச் சிறுவன் திருக்குறட் செல்வன் இராமதாசு, கண்டரமாணிக்கம் திருக்குறட் செல்வன் 9 அகவைச் சிறுவன் இரா. ஈசுவரன் ஆகியோர்தம் திருக்குறட் பயிற்சியையும்

தனித்திறனையும் கண்டு வியந்து பல இடங்களில் நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வித்துப் பாராட்டியும் அறிமுகப்படுத்தியும் கழக ஆட்சியாளர் அவர்கள் மகிழ்ந்தார்கள்.

கழகம் எத்தனையோ நூற்காட்சிகளை நடத்தியுள்ளது. திருக்குறள், திருவாசகம், திருவருட்பா முதலியவற்றுக்குச் சிறப்புக் காட்சியும் அமைத்துள்ளது. திருக்கோயில் படங்களும், அரியபல செய்திகளும், புலவர் பெருமக்களின் உருவப்படங்களும், கடிதங்களும் பிறவும் அடங்கிய இக் காட்சிகளைக் கண்டு நயவாதவரும் வியவாதவரும் இலர். இவற்றுக்காகக் கழகம் எடுத்துக்கொண்ட முயற்சிகள் கணக்கிலடங்கா.

தமிழில் அரிய நாடக இலக்கியத்தை ஆக்கிய பேராசிரியர் சுந்தரம் பிள்ளை அவர்கள் பெயரில் கழகம் ஒரு போட்டிப் பரிசுத் திட்டம் அமைத்துள்ளது. அத் திட்டத்தின் கீழ் 'அனிச்ச அடி' என்னும் நாடகமும், 'ஊமைக்குயில்' என்னும் நாடகமும் வெளி வந்துள்ளன. திருமுறைச் செல்வர் தணிகைமணி டாக்டர். வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள் பெயரில் கழகம் ஒரு பரிசுத் திட்டம் அமைத்துள்ளது. இத் திருமுறைப் பரிசுத்திட்டத்தின் கீழ்த் தேவார ஆசிரியர் மூவர் பற்றிய தனித்தனி ஆராய்ச்சி நூல்கள் மூன்று வெளியிடப்பட்டுள்ளன. திருக்குறளுக்குத் தெளிவுரை எழுதிய டாக்டர் மு. வரதராசனர் அவர்கள் பெயரில் திருக்குறள் பரிசுத்திட்டம் ஒன்று கழகத்தால் வகுக்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 'திருக்குறள் அறம்' என ஒரு நூல் வெளி வந்துள்ளது. பொருளும், இன்பமும் எழுதப்பட்டு வருகின்றன.

இங்ஙனம் பல்வேறு ஆக்கத்துறைகளில் முயன்றுவரும் கழகம் தனித்தமிழ் வளர்ச்சியையே தன் உயிர் மூச்சாகக்கொண்டு இயங்கி வருகின்றது. விழிப்புணர்ச்சி குறைந்திருந்த காலத்தில், தனித்தமிழுக்கு எதிர்ப்பு மிக்கிருந்த காலத்தில் தனித்தமிழ்க் கொள்கையை நடைமுறைப்படுத்தும் பொருட்டுக் கழகம் மேற்கொண்ட முயற்சிகள் ஏராளமானவை.

தமிழ்மக்கள் தமிழ்ப்பெயரே சூடவேண்டுமென்றும், தமிழ் நாட்டு ஊர்ப்பெயர்கள் முதலியனவெல்லாம் தமிழாகவே விளங்க வேண்டுமென்றும், தமிழர்கள் தங்கள் இல்லங்கள் வணிக நிலையங்கள் முதலியவற்றுக்குத் தமிழ்ப்பெயர் சூட்டவேண்டுமென்றும் கழகம் செய்த முயற்சிகள் பலப்பல. இவற்றுக்காக வடசொல் தமிழ் அகரவரிசை, மக்கட்பெயர் அகரவரிசை, இல்லப்பெயர் அகரவரிசை ஆகிய நூல்களும் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. கடற்கரை, பூங்கா முதலிய தொடர்வண்டி நிலையப்பெயர்கள் பல

கழக ஆட்சியாளர் அவர்களின் முயற்சியாலேயே தமிழ் வடிவம் பெற்றன. இன்னும் மாற்றம்பெற வேண்டிய நிலையங்களின் பெயர்கள் எத்துணையோ உள்ளன.

தமிழும் வடமொழியும் கற்ற செக்நாட்டுப் பேரறிஞர் கமில் சுவலபில் அவர்களுடைய பெயரின் பொருளறிந்து அவர்கள் உவக்கும் வண்ணம் 'நிரம்ப வழகிய கமிலர்' என்று பெயர் சூட்டினர் கழக ஆட்சியாளர். வங்காளத்தைச் சேர்ந்த மொழி நூலறிஞரும், சட்டமன்றத் தலைவராயிருந்தவருமான சுநீதிகுமார் சட்டர்சி அவர்களின் பெயரையும் தமிழ்ப் பெயர்ப்பாக்கி அவர்கள் மகிழுமாறு 'நன்னெறி முருகன்' என்று கழக ஆட்சியாளர் பெயரிட்டனர்.

முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பரிந்துரையின்பேரில் இந்திய நடுவணரசு கழக ஆட்சியாளர் அவர்கட்கு "பத்மஸ்ரீ" என்னும் பட்டம் வழங்கியது. ஆட்சியாளர் அதனைத் "தாமரைச் செல்வர்" என்று மொழிபெயர்த்து வழங்குவித்தனர். அதன் பின்னரே மற்றவர்களும் தமிழில் வழங்கத் தலைப்பட்டனர் என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது.

இன்று தமிழில் பட்டம் பெற்றவர்கள், தமிழ்ப்பேராசிரியர்கள் எண்ணிக்கை மிகுதி; அவர்களின் வருவாயும் தகுதியும் உயர்ந்துள்ளன. ஆனால், தமிழ்நாட்டில் தமிழுணர்வு மட்டும் தேவையான அளவிற்கு இல்லை. இது மிகவும் வருந்துதற்குரியது. தமிழறிஞர்களே தம் மக்களுக்கு வேற்றுமொழிப் பெயர்களைச் சூட்டுகின்றனர். தத்தம் இல்லங்கட்குத் தமிழ்ப்பெயர் சூட்ட மறக்கின்றனர். தாந் தாம் வாழும் தெருப்பெயர்களைத் தமிழ்ப்படுத்த முனைப்புக் காட்டா திருக்கின்றனர். இடப்பெயர்களுள் பழையன ஒருபுறமிருக்கப், புதியனவாக அமையும் நகர்கள் குடியிருப்புக்கள் முதலியனகூட நல்ல தமிழ்ப்பெயர்கள் பெறவில்லை. அரசும் இவற்றில் மனம் வைத்து அக்கறை கொள்ளவில்லை. ஒவ்வொரு நாளும் வானொலியில் கேட்கப்படும் மக்கட்பெயர்களில் 100 க்கு 98 விழுக்காடு பிற மொழிப் பெயர்களாகவே இருக்கின்றன.

எத்துணையோ முயன்றும், நம் தமிழ்ப்பெருமக்கள் மொழிப் பாதுகாப்பு, மொழி வளர்ச்சி, இனவுணர்வு, வழிபாட்டுநெறி முதலியவற்றில் சிறிதளவு முன்னேற்றமுமின்றிப் போட்டி பூசல்களை வளர்த்துக்கொண்டும், மாற்றார்க்கு ஏற்றவாறு ஒழுகி அவர்தம் ஆக்கம்பெருக வழிவகுத்துக்கொண்டும் இருப்பது எத்துணை வருந்தத் தக்கது; இரங்கத்தக்கது! எண்ணிப்பார்மின்!

———

சிவஞானபோத ஆராய்ச்சி

[அருட்டிரு அழகரடிகள்]

(சிலம்பு ௫௬, பரல் ௮, ௬எஉஆம் பக்கத் தொடர்ச்சி)

அல்லாதாரைச் சிறப்பில்லார் என்று கூறினமையால், 'சிறப்பு' என்பது ஞானச் சிறப்பை, அதாவது மெய்யினிடத்துப் பற்றிய அன்புணர்வின் சிறப்பை உணர்த்தும். சேர்வை அற - சேர்க்கை அற ; பற்று ஒழிய என்னும் பொருட்டு. பித்து-பேரன்பு. அருளிற் பொருந்துதலால் ஆண்டவன் 'பரன்' எனப்பட்டான். அதனுல் பரனுணர்வு ஞான உணர்வாயிற்று. மெய்யைப் பற்றிய தவம் உடையவராதலால் அதனை உடையவரை மெய்த்தவர் என்றார். தவம் என்றது இங்கே இறைபணி. சிவஞானம் முறுகிப் பேரின்பம் விளைதலால், மலங்களின் சிற்றின்பம் தாமே நீங்குமாதலின், 'மேவா' என்று தன்வினையாற் கூறினர்.

சிறப்பில்லாதவரோடு இணங்காமை மட்டுமே போதுமே ; சிறப்புடையார்மாட்டும் இணங்குதல் வேண்டுமோ ? அது எதற்கு ? என்று கேட்பவர்க்கு, இச் செய்யுள், 'வினை மேவா' வாதலின் சிவனடியார்களோடும் இணங்கும் முறுகிய உணர்வு தேவை என்று விடை கூறியது.

முன்றும் பிரிவு :

சிவ நிட்டையில் உள்ளவர்கள் நிட்டையிலிருந்து உடல் காரணமாக விழித்தால் பொறிகள் இயங்கத் தொடங்கும். வினையும் மாயையும் ஆணவமும் ஆகிய மும்மலங்களும், இதுதான் நேரம் என்று, அவ் விழிப்பாளரைப் பற்றிக்கொள்ளும் ; சிவ உணர்வின் முறுக்கத்தால் வாதனைகளை நீக்கிக்கொள்ளவேண்டும்.

அப்போது, திருவேடங்களும் திருக்கோயிலும் அறியாமைப் பொருள்களாயிருந்தாலும், அவற்றில் தெய்வத்தன்மை விளங்குதலால் அவை அருளுணர்வையே மிகுத்துப், பேரின்பத்துக்கும் காரணமாகின்றன.

உலகத்தில், அறியாமைப் பொருள்களாகிய ஆடை அணிகலன்களும், சந்தனப்பூச்சுக்கள் முதலியனவும், மலர் சூட்டுக்கள் முதலியனவும், அன்பர்களிடையில் இன்பத்துக்குக் காரணமாயிருக்கின்றன. அவற்றை அணிந்துகொள்ளுகிறவர்களுக்கும் ஒரு

மகிழ்ச்சியான உணர்ச்சி உண்டாகிறது. பார்க்கும் காதலர்க்கும் அவை இன்பத்தைப் பெருக்கி நிற்கின்றன. அணிந்துகொள் வோரும், நுகரும் முறையிற் பார்ப்பவரும் தம்முட் காதலுடையவர் கள்! அன்பு அவ் விருவரிடமும் இல்லையானால், பொறாமைதான் உண்டாகும்.

அறியாமைப் பொருளாயிருந்தாலும் அன்பை உணர்வோ ரிடையில் அவை இன்பத்திறம் விளைத்தல்போல, அடியார்களின் திருவேடமும் ஆண்டவன் திருக்கோயிலும் அருள்ஞான உணர் வொருமையை விளைத்து அருட்காதலால் பேரின்பம் சிறக்கின் றன; அல்லாதார்க்கு அவற்றால் இன்பம் விளைவதில்லை.

'சிவனடியார்களின் திருவேடத்தையும் சிவாலயத்தையும் பரமேசுரன்' எனத் தெளிந்து வழிபடுவதற்குக் கடவுள் இவ் விரண் டிலும் 'பிரகாசமாய் இருக்கிறான்' எனவும், அல்லாத உலகப் பொருள்களில் 'அப்பிரகாசமாய் இருக்கிறான்' எனவும், ஆசிரியர் காரணங் கூறுவார்; ஏனென்றால், அடியார்கள் அன்புக்காக இறைவனுங் கருணைகொண்டு அவ்விடங்களில் விளக்கமாயிருக் கிறான்.

வெண்ணெய் என்பது பாலிலும் உண்டு; தயிரிலும் உண்டு. தயிரில் நெய் உருண்டு திரண்டு காணப்படுவதுபோலத் திரு வேடத்திலும் சிவாலயத்திலும் இறைவன் விளங்கியிருக்கிறான். பாலில் வெண்ணெய் கலந்திருந்தாலும் அது மறைந்து நிற்கிறது. மற்றப் பொருள்களிலெல்லாம் இறைவன் கலந்திருந்தாலும் மறைந்திருந்து காரியம் செய்வான்; விளக்கமாய்த் தோன்ற மாட்டான்.

> *"தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத்*
> *தன்னுணரத் தன்னுள் இருத்தலால்,—தன்னுணரும்*
> *நேசத்தார் தம்பால் நிகழுந் ததிநெய்போற்*
> *பாசத்தார்க் கின்றாம் பதி."*

பொருள் :

பதி - இறைவன்; தன்னுணரவேண்டி - உலகத்தவர் உலகப் பற்றிலிருந்து பிரிந்து, தன்னை உணர வேண்டி; தனது உருவைத் தான் கொடுத்து - வேடமும் வடிவமுமாகிய தனது உருவத்தைத் தானே சிவனடியார்களுக்குக் கொடுத்து; தன்னுணரத் தன்னுள் இருத்தலால் - தன்னை நன்கு உணரும்படி தனக்குள் அவ்வடியார் களைச் சேர்த்தலால், தன்னுணரும் நேசத்தார் தம்பால் ததிநெய் போல் நிகழும் - எல்லாம் மறந்து தன்னையே உணரும் சிவனடியார்

உள்ளத்தில் வேடத்திலும் வடிவிலும் தயிரில் நெய்போல் விளக்க மாய்ப் பொலிந்து, இறைவன் நிகழ்வான்; பாசத்தார்க்கு இன்றும்- பாசமுடைய மற்றவர்க்குப் பாலில் நெய்போல விளங்கமாட்டான்.

இச் செய்யுள், மேற்கருத்தை இனிது விளக்கியது. அன்ப ரிடத்தில் திருவேடத்தைக் கண்டு திருக்கோயிலிலும் இறைவனைப் பொதுமக்கள் உலகப் பொருள்களிலிருந்து நீங்கி உணரக்கூடும். இவ்வாறு அன்பர்கள் ஆகவேண்டுமென்பதே இறைவன் கருத்து. ஆதலால், 'தன்னுணரத் தன்னுருவைக் கொடுத்து' என்ருர் ஆசிரியர். உலகப்பொருள்களால் அடியார் உணர்வு தன்னி லிருந்து பிரியாமைப் பொருட்டுத், 'தன்னுணரத் தன்னுள் இருத்த லால்' எனப்பட்டது. இருத்தலால் - இருத்துதலால்; தன்னையே உணர்ந்துருகும் பழைய அடியார்களாகிய 'சீவன்முத்தரின்' திருக் கோலப் பொலிவிலும் திருக்கோயில் வடிவிலும் ஆண்டவன் விளக்கமாய் இருப்பானுதலின், ததிநெய்போல் நிகழும் என்று கருதினுர். வேடம் - திருநீறு, சிவமணிகள்.

பாசத்தாரிடத்தில் அப்படியில்லை. இதனைச் செய்யுளின் பின் இரண்டு அடிகள் விளக்கின. ததி - தயிர்; நெய் - வெண்ணெய்; தயிரில் வெண்ணெய் திரண்டிருப்பதை அனைவரும் அறிவர். அப்படி இறைவன் திருவேடத்திலும் திருக்கோயிலிலும் மட்டும் விளக்கமா யிருக்கிருன்.

இதற்குக் காரணம் பால் திரிந்து தயிரானதும் அந்தத் தயிரைக் கடைந்ததுமாகும். அதுபோல உலகத்தின் அறியாமைப் பொருள் களிற் சில சிவக்கோலமாய்த் திரிந்து தோன்றுதலும், அதனை அன்பர்கள் வழிபட்டுணர்தலுமாகும். கடையாவிட்டால் வெண் ணெய் திரண்டு வராததுபோல வழிபடாவிட்டால் திருக்கோலத் திலும் திருக்கோயில் வடிவிலும் இறைவன் விளக்கம் (சிவத்துவ விளக்கம்) மிகுந்து தோன்ருது. பால் தயிராவது போலப் பொருள் களிற் சில திருநீறும் சிவமணியுமாகி ஒலிகளிற் சில திருவைந் தெழுத்துமாகித் திரிபுகொண்டன. இவ்வாற்ருல், சிவக்கோலங்கள் தோன்றுதலும் அவற்றை வழிபடுதலும் முதன்மையாயின.

விறகில் தீ இருக்கிறது; சில செய்கை செய்தால் அது விளங்குகிறது. அதுபோலத் திருவைந்தெழுத்து முதலிய மந்திரங் களால் கிரியைகள் செய்தால், திருவேடமும் திருக்கோயில் வடி வமும் தெய்வத்தன்மை பெறுகின்றன. கிரியை முறுக்கம் பெறு தற்கு மந்திரங்கள் உதவியாயிருக்கின்றன. இப்படி மந்திரத் தாலும் கிரியையாலும் விளக்கம் பெறுகின்ற திருவேடமும் திருக் கோயில் வடிவும், அவை நிகழாதபோது தெய்வத்தன்மை பெறுதல் விளங்காமற் போகுமே என்று தோன்றும்.

மந்திரமும் செய்கைகளும் நிகழ்ந்தால் அப்படி விளங்குவது மெய்தான்; ஆனால், பக்குவம் மிக்க சிலர்க்கு அம் மந்திரங்களும் செய்கைகளும் எந்த விளக்க உணர்வைத் தருமோ, அந்த உணர்வு, ஞான உணர்வில் மேலேறி நிற்கின்ற சிலர்க்கும், அங்கு உண் டாகும். அவ் வுணர்வுருவாயிருந்து விளங்கும் மெய்ஞ்ஞானிகட்கு, அவ் வேடமும் வடிவமும் காணும்போதே, சிவவிளக்கமுடையன வாய்த் தோற்றும்.

அதனாலேயே, நம் நாட்டிலுள்ள கோயில்களில் 'பாடல் தலங்கள்' சிறப்புடையனவாய்த் திகழ்கின்றன. திருஞானசம்பந்தர் முதலிய சமயகுரவர்க்கு, மந்திரங்களும் செய்கைகளும் செய்யாமலே கூடத், திருவேடத்திலும் திருக்கோயில் வடிவத்திலும் இறைவன் காட்சியானான்.

சில கோயில்கள் சிலர் பாடல் உடையன. ஒருவர் பாடலும், இருவர் பாடலும், மூவர்பாடலும், சில கோயில்கள் நால்வர் பாடலும் பெற்றிருக்கின்றன. நால்வரும் வந்து பாடிய தலம் இதனால் மிக்க சிறப்புடையதாய்த் தோற்றுகிறது. அவர்கள் எழுந் தருளுவதும் வழிபடுவதும் பாடுவதும் பிறர் பொருட்டு. தாம் பெற்ற ஞானத்தையே பிறர்க்கும் வழங்கும் தலமாய் அவர்கள் அங்கு வைத்துவிடுவதும் உண்டு; அவற்றுள்ளும் மலைப் பதி பெரு மாட்சிமைச் சிறப்புடையதாய் விளங்குகிறது. ஒரு விளக்கிலிருந்து எத்தனை விளக்குகள் ஏற்றினாலும் முதல் விளக்குக் கெடுவ தில்லையே; அப்படி, தம் ஞானத்தைப் பிறர்க்கென்று ஒரு தலத்திற் பதித்துவிட்டாலும், தம் ஞானம் ஒளிவிட்டுக்கொண்டுதான் இருக்கும்.

தான் அதுவாய்க் காணும் தவம் உடையவர்க்குத் தான் அது வாகவே தோன்றுவான்; மந்திரங்களும் செய்கைகளும் அவர்க்கு வேண்டுமென்பதில்லை. அத்தகைய மெய்ஞ்ஞானியர் சொல்லும் எதுவும் மந்திரங்களே; செய்யும் எதுவும் கிரியைகளே என்பது கருத்து. இதற்கொரு விளக்கச் செய்யுள் வருகின்றது.

> *"கண்டதொரு மந்திரத்தாற் காட்டத்தில் அங்கிவே*
> *றுண்டல்போல் நின்றங் குளதாமால்—கண்டவுருத்*
> *தானதுவாய் அன்றானன் தானதுவாய்த் தோன்றுனே,*
> *தானதுவாய்க் காணுந் தவர்க்கு."*

இதன் பொருள்:

காட்டத்தில் அங்கி வேறு உண்டல்போல் நின்று - விறகில் தீ வேறு இருப்பதுபோல் மறைந்திருந்து, கடையும்போது மட்டும்

அது வெளிப்படுதலால்; கண்டதொரு மந்திரத்தால் அங்குஉளதாம்- தாம் அறிந்ததொரு மந்திரச் செய்கையினுல் இறைவன் திருக் கோயில் வடிவிலும் திருவேடத்திலும் விளங்கியிருப்பான்; ஆல் - ஆதலால்; கண்டவுருத் தான் அதுவாய், அன்று ஆனுன் - பார்க் கும் திருக்கோயில் உருவிலும் திருவேடத்திலுமாய் இருந்து, எல்லாப் பொருள்களுக்கும் அல்லாதவனுய்க் காணப்படும் இறை வன்; தான் அதுவாய்க் காணுப் தவர்க்கு - மந்திரச் செய்கைகள் இல்லாமலே, இறைவனே அவ் வடிவுகளாகவே அவற்றிற் காண் கின்ற பெருந்தவமும் ஞானமும் உடையார்க்கு; தான் அதுவாய்த் தோன்ருனே - இறைவன் அக் கோலங்களாய்த் தோன்றமாட் டானு ? (தோன்றுவான் என்றபடி.)

புதிய அடியார்களுக்கு மந்திரங்களாலும் செய்கைகளாலும் வேடங்களிலும் திருக்கோயில் வடிவுகளிலும் விறகிலிருந்து வெளிப் படும் தீ போல் வழிபாட்டால் விளங்குவானுனுலும், சிவஞான உணர்வாகவே திகழும் தக்கவர்களுக்கு இறைவனே விரைவாய் முன் வந்து அவ் வடிவுகளில் தோன்றுவான் என்றபடி.

திருஞான சம்பந்தர் முதலிய பெரியோர், திருக்கோயில் களுக்குச் செல்லும்போது அக் கருவறை இலிங்கத்தில், இறைவன் ஆயத்தமாய்த் தோன்றியிருந்து அருள் புரிந்து வந்தான் என்று அறிகின்ருேம். அல்லாக்கால், உடனே பாடுதலும் இயலாது; அற்புதங்கள் நிகழ்தலும் இயலாதே; அப்பரடிகள் தில்லையை அடைந்தபோது, இறைவன் அங்கு ஆயத்தமாய் இருந்து, 'என்று வந்தாய்' என்று உசாவினுனே; அதனுல் மற்றவர்களும் நால்வர் பாடல் பெற்ற அங்குச் சென்று அருள் உணர்ச்சி பெற்று வந்த னர்; இச் செய்யுளில் அவ் வுண்மை புலப்படுத்தப்பட்டது.

உண்டல் போல் - இருத்தல் போல; ஆல் - ஆதலால்; தவர்க்கு - இங்கே தவத்தால் ஞானமுடையார்க்கு; மந்திரங்களும் செய்கைகளும் கொண்டு வழிபடும் நோன்புடையார் ஒரு சாரார். அவருக்கும் இறைவன் அவ் வடிவில் அவ் வழிபாடு காரணமாக விளங்குவான்; ஞானிகளுக்கு மந்திரங்களும் செய்கைகளும் நிகழாவிட்டாலும், ஆயத்தமாய் இருப்பான்.

செய்யுளில் தான் என வந்தனவெல்லாம் இறைவனே உணர்த்தும்.

திருவேடப் பொலிவுடன் திருக்கோயில்களுக்குச் சென்று சென்று இறைவனைப் பெரியோர்கள் விளக்கியிருத்தலால், அங் கெல்லாம் இறைவன் 'பிரகாசமாகவே' இயல்பில் விளங்கிக்கொண்

டிருக்கிறன். ஆதலால், புத்தடியோர் வழிபடுதற்கு அவையெல்லாம் ஏற்ற இடங்களாகும்.

நான்காம் பிரிவு :

நூலின் முடிவுரையாக வரும் இப் பிரிவு நூலுக்கு 'ஒழிபு' என்று கூறப்படும்; முதன்மை கருதி அதனை ஆசிரியர் ஒரு விதி போல விதித்துக் கூறுகிருர். முன் வந்ததையே பின்னும் எடுத்துக் கூறுவதாக இப் பிரிவைக் கொள்ளலாகாது; 'வழிபடுக' என்று வற்புறுத்துகிறது.

'அதிகரணங்'களின் கருத்தை உரைக்கும் 'சூர்ணிக் கொத்திலும்' 'வழிபடாமை ஒழிக' என்று இப் பிரிவுக்குக் குறிக்கப் பட்டது. இது 'எய்தியது இகந்து படாமல் காத்தது' என்னும் உத்தியிற் சேரும். பன்னிரண்டாம் நூற்பாவின் மூன்ருவது பிரிவில் எய்தியதை இகந்து படாமல் காத்தபடியாகும்-ஆதலால், 'இவ் விடங்களின் வழிபடுக' என்று ஆசிரியர் மேற்கோளில் குறித்தார்.

நரம்பு நாடி முதலியவற்ருேடு கூடிய உடம்பாகவும் உயிர் இருக்கிறது; வேருகவும் உயிர் இருக்கிறது; அதுபோல, இவ் வுலகுடம்புகளிலும் உயிர்களிலும் இறைவன் இருக்கிருன், இவை அல்லாதவனுகவும் இருக்கிருன்.

இறைவனுக்கு வழிபாடு என்ருல், அறியாமைப் பொருள்களும் அறிவுப்பொருள்களுமாய் இறைவன் கலந்திருக்கும் நிலையில் (திருவேடங்களிலும் திருக்கோயிலிலும் கலந்திருக்கும் நிலையில்) செய்கிருேம். அல்லாத நிலையில், அப்பாற்பட்டு விளங்கும் நிலையிலும் இறைவனுக்கு வழிபாடு செய்யவேண்டும். எல்லாவற்ருேடும் கலந்திருக்கும் நிலையில் வழிபாடு செய்வதை மூன்ரும் பிரிவு விளக்கியது. அல்லாத நிலையிலும் அவ் வழிபாடு எய்தும்படி, செய்ய வேண்டியதை இந் நான்காம் பிரிவு எடுத்துக் காட்டுகிறது.

மூன்ரும் பிரிவில் எய்தியதை நான்காம் பிரிவிலும் இகந்து படாதபடி ஆசிரியர் காக்கிருர். மேற்கோளுக்குக் கூறிய காரணத்தில், கலந்தும் அப்பாற்பட்டும் இரண்டுமாய் இருக்கும் நிலை காட்டப்பட்டது; அறிந்ததை உவமையாகக் காட்ட வேண்டுமாதலின், உடலோடு கலந்தும் அப்பாற்பட்டும் திகழும் உயிர், உவமையாய் வந்தது.

"அது இது என்றது அவனல்லான்; கண்டார்க்
கது இது என்றதையும் அல்லான்;—பொதுவதனில்,

அத்துவித மாதல் அகண்டமுந் தைவமே;
அத்துவிதி அன்பில் தொழு.''

பொருள் :

கண்டார்க்கு - இயற்கையை அறிந்தவர்களுக்கு; அது இது என்றது அல்லான் - 'அதுவும் இதுவும்' என்று பேதமாய்க் கூறுவதும் அல்லாதவன் இறைவன்; அது என்றது அல்லான்-'அதுவே' என்று ஒன்றும் நிலையாய்க் கூறுவதும் அல்லாதவன்; அது இது என்றதையும் அல்லான் - 'அதுவாகிய இது' எனக் கூறுவதும் அல்லாதவன்; பொது - இம் மூன்றுக்கும் பொதுவாய் இருப்பவன்; அதனில் - ஆதலின் - அத்தகையதில்; அத்துவிதமாதல் இரண்டன்மையாய்த் (அத்துவிதமாய்) திகழ்தலால்; அகண்டமும் தைவமே - எல்லாம் தெய்வத் தன்மை உடையனவே யாயினும், அத்துவிதி - அத்துவித கொள்கை உடைய சிந்தாந்த மாணவ; அன்பில் தொழு - அன்பு விளங்கும் திருவேடங்களிலும் திருக்கோயில் வடிவுகளிலும் தொழுவாயாக!

எல்லாப் பொருள்களிலும் இறைவன் அத்துவிதமாய்க் கலந்திருத்தலால், எல்லாப் பொருள்களிலும் தெய்வத் தன்மை உள்ளன; ஆயினும், எல்லாப் பொருள்களிலும் அன்புருக்கம் மேலிடுவதில்லை; அன்பர் திருவேடம், அன்பர் மந்திரப் பதிவு அமைந்த திருக்கோயில் வடிவு என்னும் இரண்டு இடங்களில் மட்டும் சிறப்பாக அன்புருக்கம் உண்டாகிறது. ஆதலால், 'அவ்விடங்களில் தொழுக' என்றார். 'அது இது என்றது அல்லான்' எனவும், 'அது என்றது அல்லான்' எனவும் பிரித்துக் கொள்க. 'என்றது' என்பதில் உள்ள குற்றுகரம், 'என்றதை' என ஐ யீறு பெற்று வந்தது.

இரண்டன்மை நிலை, 'கண்ணொளியும் அருக்கனொளியும்' போல இரண்டாகப் பிரிந்து பேதமாகவும் தெரியும்; 'உயிரும் உடலும்' போல அப் பேதமற்று ஒன்றுதலும் தெரியும்; 'தன்மையும் அத் தன்மையை உடைய பொருளும்' போல (குண குணி போல) பேத நிலைமையும் ஒன்றும் நிலைமையும் என இரண்டும் அல்லாத நிலைமையும் தெரியும்.

இரண்டன்மை நிலை என்பது இம் மூன்றுக்கும் பொது; இம் மூன்றும் உடையது, 'அத்துவிதம்'. இங்ஙனம் இயற்கையில் இரண்டன்மையாய்த் திகழ்கிறது. சித்தாந்தம் அத்தகைய அத்துவிதக் கொள்கையுடையது. 'அக் கொள்கையுடைய மாணவ' என்றற்கு 'அத்துவிதி' என்றார். ஆசிரியர் தாமும் அத்தகைய

கொள்கை கொண்டிருத்தலின் அண்மை விளியிற் கூறினர். அன்பு: ஆகு பெயர்; 'அன்பு விளங்கும் இடங்கள்' என்பது பொருள்.

இயற்கையில் இரண்டன்மையாய்க் கலந்திருக்கும் இறைவன் நிலை கூறி, அக் காரணத்தால் எல்லாப் பொருள்களும் தெய்வத் தன்மை வாய்ந்தனவே என்று விளக்கித் 'திருவேடம்' 'திருக் கோயில்' என்னும் இரண்டில் அத் தெய்வத் தன்மையின் மிகுதிப் பாடு தெளிவிக்கப்பட்டது; அதனோடு, 'அல்லானாய் இருக்கும் நிலை' இறைமையின் மிகுதிப்பாடே எனவும், அதுவும் அம் மிகுதிப் பாடு புலப்படும்படி குறிப்பிட்ட சில பொருள்களில் விளங்கும் தகுதிப்பாடே எனவும், அல்லாத நிலையில் அவன் விளங்கும் ஓரளவு நிலையை இங்ஙனம் உலகியற்கையிற் காணலாம் எனவும், இம் முறையில், அல்லாத நிலையிலும் வழிபாடு எய்துவிக்கலாம் எனவும், ஆதலால் இவ்விடங்களில் வழிபடுதல் முதன்மை எனவும் வழிபாட்டின் இன்றியமையாமையை ஆசிரியர் தெளிவித்தார்.

> ''வினையால் அசத்து விளைதலான், ஞானம்
> வினை தீரின் அன்றி விளையா;—வினை தீர
> ஞானத்தை நாடித் தொழுவே அது நிகழும்:
> ஆனத்தால் அன்பில் தொழு.''

உலக பேதங்களில் பற்று நீங்கி, எல்லாம் இறைவனாய்க் காணும் சிவஞான நிலையே 'அத்துவிதத்தை' உணர்த்துமே, வழி பாடு வேறு எதற்கு? என்று நினைப்பவர்க்கு இச் செய்யுள் வழி பாட்டினால் ஞானம் பெருகும் என்று விடை கூறுகிறது.

பொருள் :

வினையால் அசத்து விளைதலான் வினைதீரின் அன்றி ஞானம் விளையா - உடலூழ் என்னும் 'பிராரத்த வினை'யால் (ஏனைய மலங் களின் வாதனையும் முறுகி) உலக உணர்வு உண்டாதலால் அந்த உடலூழ் தீர்ந்தாலல்லாமல் மெய்யுணர்வு விளையாது; வினை தீர ஞானத்தை நாடித் தொழவே அது நிகழும் - அந்த உடலூழ் பற்றறத் தீரும்படி ஞானமுடையோரைச் சேர்ந்து ஞானமே நோக்க மாகத் தொழவே அந்த ஞானம் உண்டாகும்; ஆனத்தால் அன்பில் தொழு - ஆனதனால் அன்புடைய அந்த இடங்களைத் தொழு வாயாக!

வினை தீர்ந்தால் ஞானம் பெருகுமாதலால் ஞானத்தையே நாட்டங்கொண்டு அந்த இடங்களைத் தொழுதுவந்தால், உடலூழும் பின்னும் மெலிந்து, நிறை ஞானமாய்ப் பெருகும் என்று

வலியுறுத்தினர். விளையாது என்பது ஈறுகெட்டு 'விளையா' என நின்றது. உலகப் பொருள்களை வேண்டாமல் என்றற்கு 'ஞானத்தை நாடி' என்றார். 'தொழவே' என்னும் ஏகாரம் வேற்றுமைப் பொருள் தந்தது. அது - அந்த ஞானம்; ஆனதனல் என்பது, 'ஆனத்தால்' என ஒற்று மிக்கது.

"தன்னை யறிவித்துத் தான்றனைச் செய்தானைப்
பின்னை மறத்தல் பிழை; அலது;—முன்னவனே
தானேதா னச்செய் துந் தைவமென் றுந் தைவமே
மானே தொழுகை வலி."

பொருள்:

தன்னை அறிவித்து - (தொன்மையில் அறியாமையிற் கிடந்த உயிரை மாயை முதலியன சேர்த்து) அறிவித்து; தான் தானச் செய்தானை - (வர வர அவ் வுயிரின் அறிவைப் பெருக்கி வந்து உரிய பக்குவத்தில் குருவாக எழுந்தருளித்)தன்னுணர்வாகவே செய்த இறைவனை; பின்னை மறத்தல் பிழை - பின்பு நன்றி மறத்தல் பெருங்குற்றமாம்; அலது - (அறிந்து பின் செய்வதாத லால்) அது பொறுக்கத்தக்கதன்று; முன்னவனே தானே தானச் செய்தும் - இறைவனே கருணையினல் தானக எழுந்தருளி வந்து தன்னுணர்வாகவே செய்துங்கூட; தைவம் என்றுந் தைவமே - (உயிர் அதன் உடைமைப் பொருளாதலால் வீடுபேற்றிலும் எஞ் ஞான்றும்) அடிமையே; மானே - மெய்யறிவுடைய மாணவ; தொழுகை வலி - இறைவனை வழிபடுதலே வலிமையானது.

'தன்னை' அறிவித்து என்றவிடத்துத், 'தன்' என்றது உயிர்; மற்ற இடங்களிலெல்லாம், அது, இறைவனை உணர்த்தும். பின்னை என்றதனல் 'தொன்மையில் தன்னை அறிவித்தல்' பெறப்பட்டது. பின்னை என்பது, ஆட்கொண்ட பின்னை என்றபடி. அலது - அல்லாதது; பொறுக்கத்தக்கதல்லாதது; 'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்த லரி'தாதலின், இவ்வாறு கூறினர். 'உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்பதும் நினைவு கூரப்படும்; வேதவாக்காதலால், பிழைத்தல் எவ்வாற்ரு னும் இயலாது.

உயிர், ஏதும் அறியாமல் இருந்தபோதிலிருந்து, கருணை யினல் தானே முன்வந்து தானச் செய்ததை நினைந்து, 'தான் தானச் செய்தானை' என்றார். இறைவனே தன் கருணையால் அவ் வாறு பின்னுஞ் செய்து வருதலின், 'தானே தானச் செய்தும்'

என்ருர். உம்மை சிறப்பு. முதல் தைவம், உடைமையாதலால், 'என்றும் தைவமே' என்றது, முத்திக் காலத்திலும் அத்தகையதே என்பதுணர்த்திற்று. மானே - அறிவுடையோனே; இந் நான்காம் பிரிவுச் செய்யுட்களில், கடைசி அடி, மாணவரையே குறித்து வருதலால், இங்கும் அவ்வாறு உரைக்கப்பட்டது. இப் பிரிவின் எல்லாப் பாட்டிலும் தொழுதல் வந்தமையால் இக் கடைசிப் பாட்டிலும் தொழுகை வந்தது. எல்லாம் கடந்த இறைவன் மாட்சியைத் தெரிந்து, கருணையினல் அவன் தம்மையும் ஏனை எல்லாவற்றையும் கடவி வரும் நன்றியும் கருதி, அன்பு மிகும் திருக்கோலத்திலும் திருக்கோயில் உருவங்களிலும் மக்கள் வழிபாடு செய்தலே அவர்களுக்கு உய்வுக்குரியது; மேலும், வழிபாடு செய்தலே மற்ற எல்லாவற்றையும்விட வலிமையாக உயிர்க்குத் துணை செய்யும்; ஆதலின், 'தொழுகை வலி' என்ருர் ஆசிரியர்!

முற்றும்.

சிவஞானபோதப் பயன்

"சிவமென்னும் அந்தரர, சிந்தைநேர் நோக்கப்
பவமின்ருங் கண்வா சகத்திற்—சிவமுண்டாம்,
ஒன்றும் இரண்டு மலத்தார்க்கிங் கொண்குருவால்
இன்றிந் நூன் மும்மை மலர்க்கு."

பொருள் :

சிவம் என்னும் அந்தரர - சிவம் எனப்படும் சித்தாந்த மாணவ; ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கு - ஒரு மலமும் இரு மலமுமாய் இருக்கும் விஞ்ஞானகலர்க்கும் பிரளயாகலர்க்கும்; சிந்தை நேர் நோக்க - சிந்தையில் அருட் பார்வை கொண்டு நேர்மையாய் நோக்கவும்; கண் வாசகத்தின் பார்வையாலும் தொடுதலாலும் சொல்லாலும் எதிர் நின்று தீக்கை செய்தலால்; பவம் இன்ரும் சிவம் உண்டாம் - பிறவி இல்லையாகிப் பேரின்பம் உண்டாகும்; இங்கு - இவ் வுலகில்; ஒண் குருவால் - ஞான குருவாய்ப் பின்னின்று இயக்குதலால்; இன்று இந் நூல் மும்மை மலர்க்கு - மூன்று மலமும் உடைய சகலர்க்கு இந் நாளில் சிவ ஞானபோதமாகிய இந் நூல் உரியது.

'விஞ்ஞானகலர்க்கும்' 'பிரளயாகலர்க்கும்' முறையே சிந்தையிலேயே அகப்பார்வையாய் நோக்குதலாலும், தேவகுருவாய் எதிர் வந்து கண்ணாலும் 'பரிசத்'தாலும் 'வாசகத்'தாலும் தீக்கை செய்தலாலும் பாசவீடும் சிவப்பேறும் உண்டாகும். சகலர்க்கு, மக்கள் இனத்திலேயே ஞான குருவாய் எழுந்தருளி இறைவன் சிவஞான

போத அருளுரையால் ஆட்கொள்வான் என்று இச் செய்யுள் விளக்கியது.

சித்தாந்தத்தின் கொள்கையுடையவராய்ச் சிவத்தில் தலைப் பட்டவரை 'மெய்கண்ட சிவம்' 'அருணந்தி சிவம்' என்பதுபோலச், சிவம் எனப்படுதலும் உண்டு. ஆதலின், 'சிவம் என்னும் அந்ததர' என்றார். 'அந்ததர' என்றது சித்தாந்த மாணவரை; சித்தாந்தத்திற்கு மேல் வேறு முடிவுகள் இல்லையாதலாலும், சித்தாந்தமே முடிந்ததன் முடிவாதலாலும், சித்தாந்தத்தை 'அந்தம்' என்றே கூறினர். சித்தாந்த மாணவரை அதனால் 'மிகு தீவிரப் பக்குவமுடையராகக் கருதி ('தீவிரம்' 'தீவிரதரம்' என்பன நினைவு கூர்க) 'அந்ததர' என்றார். நேர் நோக்க - ஒத்து நோக்க; ஒன்றும் இரண்டும் மலத்தார்க்கு - ஒரு மலமும் இரு மலமும் உடைய 'விஞ்ஞானகலர்' 'பிரளயாகலர்க்கு; இருவரையும் ஒரு தொடராற் கூறினமையால்; 'பவம் இன்றாம் சிவம் உண்டாம்' என்பதையும் ஒன்றாய்க் கூறிக்கொள்க. சிவஞானபோதமாதலின் அதற்குரியவரான சகலரை அவ் விருவரினின்றும் வேறு பிரித் தற்கும் எடுத்துக்கொண்டது பயன்பட்டது. பாச வீடும் சிவப் பேறுங் குறிக்கும்; இன்றாம் - இன்றாகி: எதிர்மறைக் குறிப்பு முற்றெச்சம். கண் வாசகத்தில் என்பவற்றோடு இனம் பற்றிப் 'பரிசமும்' கொள்ளப்படும். ஞான குருவை 'ஒண் குரு' என்றார். ஞானத்தில் திளைப்புடைய குருவை ஈதுணர்த்திற்று. 'மும்மை மலர்க்கு இந் நூல்' என்று முடித்துக்கொள்க. ஏதுவோடும் எடுத்துக் காட்டுக்களோடும் ஆராய்ச்சியுடன் இந் நூல் வருதலால் அறிவாராய்ச்சி மிக்க இக் காலத்திற்குச் 'சிவஞானபோதம்' பொருந் தியது என்றபடி பகுத்தறிவுடையோர் எவ்வளவும் ஆராய்ந்து கொள்ளலாம் என்பது கருத்து. இக் காலத்து என்பதற்கு 'இன்று' என்றார்.

——

ஞானாசிரியர் மரபு

"எந்தை சனற்குமரன் ஏத்தித்தொழ இயல்பாய்
நந்தி உரைத்தருளும் ஞானநூல்—சிந்தைசெய்து
தான் உரைத்தான் மெய்கண்டான் தாரணியோர் தாம்உணர,
ஏதுதிருட் டாந்தத்தால் இன்று."

பொருள் :

எந்தை சனற் குமரன் ஏத்தித்தொழ - எம் ஞானத் தந்தையா ராகிய 'சனற்குமார முனிவர்' வாழ்த்தி வணங்க; இயல்பாய் நந்தி

உரைத்தருளும் ஞானநூல் - தாம் கல்லால நீழலில் இயல்பா யிருந்து சிவபெருமான் சொல்லி அருளிய சிவஞானபோதம் என்னும் ஞான நூலை; மெய்கண்டான் - மெய்கண்டதேவர்; தாரணியோர் தாமுணர - உலகத்தவர் உணரும்படி; ஏது திருட்டாந்தத்தால் - மேற்கோளும் காரணமும் எடுத்துக்காட்டுக்களால்; சிந்தை செய்து- சிந்தித்து; இன்று உரைத்தான் - இந் நாளிற் கூறியருளினர்.

'ஞானநூல்' என்பது, இங்ஙனம் பரம்பரையின் வந்தது. எழுதாமறையாய்க் குறிப்புக்களால் வந்த இதனை, எழுதும் மறை யாக மெய்கண்டார் முதல் முதலாக நூல் செய்தார்; ஆதலின் சிந்தை செய்து மேற்கோளும் ஏது எடுத்துக் காட்டுக்களும் உடன் கூறினர். அங்ஙனம் கூறியது உலகோர் அறியும் பொருட்டு. 'உலகோர்' என்னுங் குறிப்பினால், உலகத்தில் இவர் செய்த நூல் எழுதவும் கூடிய முதல் நூலாயிற்று. 'சிவஞானபோதம்' ஞான நூல் எனப்பட்டமை காண்க.

நந்தி - சிவபெருமான் பெயர்; சிவபெருமானுக்குரிய 'நந்தி' என்னும் பெயர் நந்தி பெருமானுக்கும் வந்தது. ஞானங் கேட்போ ரெல்லாரும் நந்திகளே; நந்தி - உணர்வு தழைத்தலுடையோர்; வாய் பேசா மோனியர்; குறிப்பால் வெளிப்படுத்துவோர். கேட்ட நந்தி பெருமான் சனற்குமாரற்கு உரைத்தார். ஞான நூலாதலால், எழுதாமறையாயிற்று. இந் நூலைக் கொண்டுவந்த பரம்பரை, 'திருக்கயிலை மர'பெனவும் 'நந்தி மர'பெனவும் கூறப்பட்டது; சிவ பெருமான் மரபு என்பது கருத்து.

மெய்கண்டார்க்கு இந் நூலை அறிவுரை செய்தது 'பரஞ்சோதி முனிவர்' என்று வரலாறு கூறும். பரஞ்சோதி முனிவர்க்கு அருளுரை செய்து விளக்கினவரைச் 'சத்தியஞான தரிசநிகள்' என்பர். அவ் விருவர் பெயரும் இச் செய்யுளில் வரவில்லை.

'சத்திய ஞான தரிசநிகள்' என்பதன் தமிழ்ப் பெயரே 'மெய்கண்டார்' என்பது. மெய்யை (மெய் என்னும் சத்தியத்தை, சத்திய ஞானத்தைத், தரிசித்தவர்) கண்டவர் ஆதலின், மெய் கண்டார் எனப்பட்டது. மெய் என்றது, 'அத்துவிதம்' என்பதன் பொருள்.

இவ் வுண்மையாலும் ஞானப் பாட்டனர் பெயர் பெயரர்க்கு உரியதாகையாலும் அவ் விருவர் மரபும் இடையே கொள்ளப்படு கிறது. இவ்வாற்றால், 'திருக்கயிலை மரபு' என்பது நந்தி பெரு மான், அவர் மாணக்கர் சனற்குமாரர், அவர் மாணக்கர் சத்திய ஞானதரிசநிகள், அவர் மாணக்கர் பரஞ்சோதி முனிவர் என மெய்கண்டார்க்கு முன் அருளுரை பெற்றார் பெயர் கூறப்படுகிறது.

பரஞ்சோதி முனிவரிடம் அருளுரை பெற்ற மெய்கண்ட தேவருக்கு மாணுக்கராய் அருணந்திசிவமும், அவருக்கு மாணுக்கராய் மறைஞானசம்பந்தரும், அவருக்கு மாணுக்கராய் உமாபதிசிவமும், என நால்வர் புறச்சந்தான குரவராய்க் கொள்ளப்படுகின்றனர். எனவே, முன் நால்வரும் அகச்சந்தான குரவராவர். முதலில் இம் மரபு தொடங்கிய வகை மட்டும் செய்யுளில் வந்தது என்ப.

இந்த ஞானபரம்பரை இப்போது திருவாவடுதுறை தருமபுரம் ஆதீனங்களாக உள்ளன. திருப்பனந்தாள் தருமபுர ஆதீனத்தைச் சேர்ந்தது.

திருவள்ளுவதேவர் ஞானுசிரியராய்த் திருக்குறள் வேதம் அருளிச் செய்து, வேதப் பொருளாகிய அறம் பொருள் இன்பம் வீடு என்னும் நான்கையும் முப்பாலில் அடக்கிச் சிவபெருமான் திருக்கயிலையில் அருளியபடியே அமைத்திருத்தலால், திருவள்ளுவதேவரும் திருக்கயிலை மரபுடையராய் அவர் வழிப்பட்ட குருகுலத் திருக்குறள் மடமும் (குருபழநியாதீனம்) வழி வழி வரும் அத் திருமடத்தின் தலைவர்களும் திருக்கயிலை மரபுடையவர் ஆகின்றனர்.

திருமூலர் வழியிலும் அவர் வழியினராகிய மௌன மடத்துத் தேசிகர், தாயுமானுர் முதலியோரெல்லாம் வேருெரு வழியில் திருக்கயிலை மரபுடையராய்ச் சிறக்கின்றனர். திருக்கயிலையைச் சேர்ந்த நந்திகள் பலர்; ''என்னேடு சேர்த்து எண்மரும் ஆமே'' என்பர் திருமூலர்! பலரும் பல வேறு திருமடங்கள் அமைத்தனர்; வழி வழித் தலைவர்களும் உள்ளனர். மூலவர் - திருமூலதேவர். இவ்வாறு திருக்கயிலைமரபாய் நந்திமரபென்னும் பெயரிற் பல உள்ளன. திருக்கயிலை மரபாய் விளங்குவது, சிவநெறி!

———

குறிப்பு

தவத்திரு அழகரடிகள் எழுதியுள்ள 'மெய்கண்ட சாத்திரம் பதினுன்கின் உரைநடை நூல்' அச்சிடப்பெறுகிறது.

—கழகம்.

தமிழின் தலைமையை நாட்டும் தனிச்சொற்கள்

[ஞா. தேவநேயன்]

15 புகா (உணா)

உண்ணுதல் என்பது உட்கொள்ளுதல்; அதாவது, ஒன்று இன்னொன்றைத் தன்னுள் இழுத்தல் அல்லது சேர்த்தல். வாய்வழி வயிற்றிற்குள் ஒன்றை இடுதலும், நிலம் நீரை உறிஞ்சுதலும், பாதம் செம்பஞ்சுக் குழம்பு நிறத்தைப் பெறுதலும், உண்ணுதலே. இவற்றுள் முதலதே மக்கள் பேச்சிற் பெரு வழக்கானது. இறுதியது, சேர்தலின் அல்லது சேர்த்தலின் வகைகளுள் ஒன்றாகும்.

உண்ணுதல் (பெருவழக்கு) = I (முதற்பொருள்): உணவை உட்கொள்ளுதல். II (வழிப்பொருள்): 1. நுகர்தல் (அனுபவித்தல்). ''தண்கடற் சேர்ப்ப நீ யுண்டவென் னலனே' (குறுந். 236). 2. கவர்தல். ''அவுணனு ருயிரையுண்ட கூற்றினை'' (திவ். திருக்குறுந். 2). 3. இசைவாதல். ''ஓசை யூட்டினு முண்ணுத வாறும்'' (யாப். வி. பக். 97). 4. ஒரு வினையின் பயனையடைதல். கோவலன் பொற் கொல்லனாற் கொலையுண்டான் (கொல்லுண்டான்).

உண்ணுதல் என்பது அடிப்படைப் பொருளில் உட்கொள்ளுதலாதலின், பெரும்பாலும் உள்ளிடத்தை அல்லது உட்புகுத்தலைக் குறிக்குஞ் சொற்களினின்றே உண்ணுதல் வினைச்சொற்கள் தோன்றியுள்ளன.

எ-டு: உள்—உண்—உணா—உண—உணவு.

புகுத்தல் = 1. உட்செல்ல விடுதல். ''வாயில் புகுப்பினும்'' (தொல். பொ. 149). 2. உட்செலுத்துதல். 3. உண்ணுதல். இப் பொருளில் இச் சொல் வழக்கற்றது.

புகு—புகவு = 1. உட்செல்கை. ''கழுது புகவயர'' (ஐங்குறு. 314). 2. உணவு. ''பழஞ்சோற்றுப் புகவருத்தி'' (புறநா. 395).

புகு—புகா = உணவு. ''புகா அக் காலை'' (தொல். பொ. 107).

புகா—புவா—புவ்வா = சோறு, உணவு (நாட்டுப்புற வழக்கு)

புக+அட்டு (ஒட்டு)=புகட்டு. புகட்டுதல்=1. உட்செலுத்துதல். 2. ஊட்டுதல். தாய் குழவிக்குப் பாலூட்டினாள். 3. அறிவுறுத்துதல். "அல்லம தேவன் சரிதத் தீம்பால்.........புகட்டினானால்" (பிரபுலிங். துதி. 11), "செவிதிறந்து புகட்ட" (திருவிளை. விடையிலச். 4).

ஒட்டு என்னும் துணைவினையை, தூங்கவொட்டார், வரவொட்டார் என்னும் எதிர்மறை வினைகளிற் காண்க. ஒட்டுதல்= பொருந்துதல், இசைதல். ஒட்டு—அட்டு. எ - டு: வரட்டு (வர+ அட்டு), போகட்டு (போக அட்டு). இவை ஒருமை யேவல். வரட்டும், போகட்டும் என்பன பன்மை யேவல்.

புகட்டு—போட்டு (உ. வ.). குழந்தைக்கு மருந்து போட்டு.

புக+விடு=புகடு. ஒ. நோ: போக விடு—போகடு—போடு. புகடுதல்=வீசியெறிதல். இதற்கு ஊட்டுதற் பொருளில்லை.

புகு—Gk. பகு (phag) *phagin*, to eat, devour; *phagēma*, food; *phagas*, *phagōn*, glutton.

phage (*phag*), combining form meaning 'eater' as in *xylophage*.

phagedena, gangrene, *L. phagedaena* fr. Gk. *phagedaina*, cancer, lit. 'voracity' fr. *phagein*, to eat.

phago, combining form meaning 'eating' as in *phagocyte*.

phagous, combining form meaning 'eating, feeding on' as in *creophagous*, *xylophagous* Gk. *phagos*, 'eater of'.

phagus, combining form meaning 'eating', as in *sarcophagas*, L. fr. Gk. *sarkophagos*, orig. flesh-consuming (stone).

phagy, combining form meaning 'eating of' (something specified), as in *anthropophagy*, *geophagy*.

phagia, same as 'phagy'.

உகரமுதல் அகரமுதலாகத் திரிவது பெரும்பான்மை. தமிழில் மூச்சொலி (aspirate) இல்லை. தமிழ் மெய்கள் பிற மொழிகளில் மூச்சொலி மெய்யாகத் திரிவதுண்டு.

எ - டு: கல்—khal (பிராகுவீ.).

இங்ஙனம் தமிழ்ச்சொல் தமிழுக்கு அகப்புறமான திரவிடத் திலேயே மூச்சொலி பெறும்போது. அதற்குப் புறமான ஆரியத்தில் அதைப் பெறுவது இயற்கைக்கு மாருனதன்று.

ph என்னும் இணைவரி அல்லது கூட்டெழுத்து, ஆங்கிலத் தில் 'f' என்ருெலிப்பினும், கிரேக்கத்தில் மூச்சொலி கூடிய பகரமே (ப்ஹ) என்பதை அறிதல் வேண்டும்.

புகு என்னும் தமிழ்ச்சொல், கிரேக்கத்தில் பகு அல்லது பக என்று திரிந்தபின், அதற்கினமான இந்திய ஆரிய முன்னை மொழி யில் (Pre - Indian East Aryan) புஜ் (bhaj) என்று திரிந்துள்ளது ஒ. நோ : பகு—வ. பஜ் (bhaj).

சமற்கிருதத்திற்கு முந்தின வேத மொழியிலேயே இத் திரிபு காணப்படுவதால், இது வேத ஆரியர் இந்தியாவிற்குட் புகு முன்னரே நிகழ்ந்திருக்க வேண்டும். மிடற்ருெலி அண்ண வொலி யாகத் திரியும்போது, எடுப்பிலா வொலி (voiceless sound) எடுப் பிலா வொலியாகவும் எடுப்பொலி (voiced sound) எடுப்பொலி யாகவும் திரிவதே பொதுவியல்பு.

எ - டு : க—ச : குடிகை—குடிசை.
g—j : L. ago—Skt. aj (to drive).

இம் முறைப்படி, புகு என்பதன் திரிபான பகு (phag) என்னும் மேலையாரியக் கிரேக்கச் சொல் கீழையாரியத்தில் புஜ் (bhuj) என்று திரிந்துள்ளது. எடுப்பிலாவொலி எடுப்பொலியாகத் திரிவதும் இயல்பே.

எ - டு : E. acre—L. ager, Gk. agros.
E. triple—E. treble.

bhuj, to eat, eat and drink, enjoy a meal, consume, enjoy, use, possess, make use of, utilize, exploit, suffer, experience, undergo, RV., AV., Up., MBh., Kāv.

bhukta, enjoyed, eaten, made use of, possessed etc.

bhukti, eating, enjoyment, consuming, frution, possession, usufruct.

bhuktvā having enjoyed or eaten or possessed.

bhuji, the branting of enjoyment, favour, RV.

bhujishya, granting food, useful, AV.

bhoktru, one who enjoys or eats, Maitr Up.

bhōga, enjoyment, eating, feeding on, RV.

bhōgin, enjoying, eating, having, wealthy; a king, a concubine.

bhōgya, to be enjoyed, to be used.

bhōja, bestowing enjoyment, bountiful, liberal, RV· leading a life of enjoyment, BhP., a king.

bhōjaka, cating, being about to eat; giving to eat, nourishing.

bhōjana, feeding, giving to eat; the act of enjoying, using, RV., the act of eating; a meal, food.

bhōjaniya, to be eaten, eatable ; to be fed, to be made to eat, Mn. ; one to whom enjoyment is to be afforded or service to be done, Nir.; food (esp. what is not masticated, as opp. to *khādaniya*) MBh.

bhōjin, enjoing, eating.

bhōjya, to be enjoyed or eaten, eatable, what is enjoyed or eaten, anything to be enjoyed or eaten, a festive dinner.

bhōktavya, to be enjoyed or eaten, to be used or employed ; to be possessed or governed or ruled, to be utilized or exploited, to be fed.

சென்னைப் ப. க. அகரமுதலியைத் தொகுத்தவர்கள், புகு (உண்) என்னும் தென்சொற்கும் புஜ் (bhuj) என்னும் வட சொற்கும் உள்ள தொடர்பை அறிந்தே, புகவு, புகா என்னும் இரு சொற்களையும் புஜ் என்னும் வடசொல்லொடு ஒப்பு நோக்கக் குறித்திருக்கின்றனர். ஆயின் தென்சொல்லே வடசொல்லின் மூலம் என்று காட்டுவது அவர் கருத்தன்று. வடமொழி தேவமொழி என்னும் அடாவடித்தன ஏமாற்றை அடிப்படையாகக்கொண்டு, வடமொழியிலுள்ள தென்சொல்லெல்லாம் வடசொல்லென்று சொல்லாமற் சொல்வதே, அவ் வொப்பு நோக்கக் குறிப்பின் நோக்கம். தமிழை வடமொழித் திரிபாக அல்லது கிளையாகக் காட்டவேண்டுமென்பதே சென்னைப் ப. க. அகரமுதலித் தொகுப்பாளரின் அடிப்படைக்கொள்கை யாதலால், வடமொழிக்கு அடிப்படையான தென்சொற்களையெல்லாம் வடசொல்லென்று காட்டுவ

தொடு, உண்மையில் தொடர்பின்றி ஒரு மருங்கு ஒலியொத்த போலியொப்புமைச் சொற்களையும் வடசொற்களினின்று திரிப்பதிலும் அவற்றொடு ஒப்புநோக்குவதிலும், கண்ணுங் கருத்துமாயிருந்திருக்கின்றனர். எ - டு : ஆரியன் - ஐயன், ச்யாமா - சாமை. வேந்தன் - ஒ. நோ : தேவேந்திரன், மருந்து - ஒ. நோ : அம்ருத.

இதனால், தென்மொழி வடமொழிக்கு மூலமாயிருக்கலாம் என்னும் ஓர் அச்சம் அவர் உள்ளத்திற் குடிகொண்டிருந்ததென உய்த்துணரக் கிடக்கின்றது.

தமிழருட் பெரும்பாலார் மூவாயிரவாண்டு அடிமைத் தனத்தால் பகுத்தறிவு, தன்மானம், நெஞ்சுரம் ஆகிய முப்பண்பையும் முற்றும் இழந்திருப்பதனாலும், அவருள் மொழியாராய்ச்சியாளர் மிகச் சில்கியும் அவருள்ளும் வடமொழியாராய்ச்சியாளர் மிக அருகியும் இருப்பதனாலும், வடமொழியாளர் கூற்று மறுக்கொணா மறைமொழியாய் இருந்து வந்திருக்கின்றது. இதற்கு மூலக் காரணம் இடைக்கழகத்திற்குப் பிற்பட்ட மூவேந்தர் பேதைமையே.

இன்று அறிவியல் முறைப்பட்ட ஆராய்ச்சிக்காலமாதலால், மூவாயிரவாண்டு மறையுண்டு கிடந்த வுண்மை சிறிதுசிறிதாக வேனும் வெளிப்படத் தொடங்கிவிட்டது.

புகு என்னும் தென்சொல் புஜ் (bhuj) என்னும் வடசொற்கு மூலமாயிருப்பதொடு, தோற்றமும் வழிமுறைத் திரிபுங் கூறும் தெளிவான தன்வரலாறுங் கொண்டுள்ளது. இவ் வியல்பு அதன் திரிவான ஆரியச்சொற்கட்கில்லை.

உல்—உள்—உளு=மரத்தைத் துளைக்கும் புழு. உளுத்தல்= மரத்தைப் புழு அரித்துத் துளைத்தல்.

உல்—புல்=உட்டுளை, உட்டுளையுள்ள நிலைத்திணை, தாளில் உட்டுளையுள்ள பயிர்வகை, மூங்கில், புறக்காழுள்ள தென்னை பனை முதலியன.

புல்—புள்—(புளு)—புழு=காய்கறிகனிகளைத் துளைக்கும் உளு.

புழுத்தல்=புழு உட்புகுதல் அல்லது அரித்துத் துளைத்தல்.

புழு—புகு. ஒ. நோ : தொழு—தொகு, மழ—மக, குழை—குகை.

புகுதல்=உட்செல்லுதல். எலி வளைக்குட் செல்லுதலும் மக்கள் வீட்டிற்குட் புகுதலும் வினைவகையில் ஒன்றே.

புகுத்தல்=உட்செலுத்துதல், உணவை வாய்வழி வயிற்றிற் குட் செலுத்துதல், உண்ணுதல்.

புகு (உண்) என்னும் சொல்லின் ககரம், கிரேக்கத்தில் 'g' என எடுப்பொலியாய் மாறினும், மிடற்றொலியாகவே இருத்தலையும், ஏனையாரிய மொழிகளில் 'j' (ஜ) என்னும் அண்ணவொலியாகத் திரிதலையும், நோக்குதல் வேண்டும். இதனால், கிரேக்கச் சொல்லின் முன்மையும் வேதச்சொல்லின் பின்மையும் அறியப் படும்.

பொதுவாக, மேலையாரியத்திலுள்ள எடுப்பொலிக் ககரம் (g) கீழையாரியத்தில் ஐகரமாகத் திரிகின்றது.

எ - டு:

தமிழ்	மேலையாரியம்	வேதமொழி
கிழம்	Gk. geron	ஜரா
தெ. கனு	L. gonos	ஜந்
காண்	ON. kna, E. know, L. gno; Gk. gno	ஜ்ஞா
உகை—அகை	L. ago	அஜ்
அகரம்	L. ager, Gk. agros	அஜ்ர
முழுகு	L. mergo	மஜ்ஜ்

ஒரு விளம்பரம்

வீரமாமுனிவர் இயற்றிய 1100 பாடல்கொண்ட **மாணிக்க காண்டம்** என்னும் அரிய மருத்துவ நூலின் ஏட்டுப்படியேனும் கையெழுத்துப்படியேனும், எவரிடமேனும் இருப்பின், மக்கள் பொது நலமும் நூலின் அருமையும் ஆசிரியர் பெருமையும் நோக்கி, உடனே 'செந்தமிழ்ச் செல்வி' முகவரிக்குத் தெரிவிக்க. நூல் கிடைப்பின், உடனே அதை வெளியிடவும் உடையவர்க்கு ஒரு தகுந்த பரிசளிக்கவும் ஏற்பாடு செய்யப்படும்.

ஞா. தேவநேயன்

‘கவைமக நஞ்சுண்டாஅங்கு அஞ்சுவல்’

[தமிழாகரர். வித்துவான். செ. வேங்கடராமச் செட்டியார்,

முன்னுள் தமிழ் விரிவுரையாளர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்]

சங்ககாலப் புலவர்களில் சிலர் இயற்பெயர் மறைந்திட, அவர் வழங்கிய தொடர் மொழிகளால் சிறப்புப்பெயர் பெற்றுள்ளனர். அச் சிறப்புப் பெயரே அவர்தம் இயற்பெயர் போலப் புலவர்களிடை வழக்குப் பெற்றுவிட்டன. அணிலாடு முன்றிலார், செம்புலப் பெயனீரார் என்பன அவ்வாறு வந்த சிறப்புப்பெயர்களே. ‘கவைமக நஞ்சுண் டாஅங்கு’ என்ற புதுவகையான உவமையைக் கையாண்டமையால் ஒரு புலவர் கவைமகனுர் எனப் பெயர் பெற்றுள்ளார். இவ் வுவமையின் சிறப்பு புலவர்களால் நன்கு சிந்தித்துப் போற்றப்பட்டதாகும். இவ் வுவமையால் புலவர் எக் கருத்தை உணர்த்தினுர் என்பது ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.

முதலில் உ. வே. சா. அவர்கள் குறுந்தொகை உரையில் இவர் பாடலுக்கு என்ன எழுதியுள்ளார் என்பதைப் பார்க்கலாம்.

தலைவனிடம் தலைவி இற்செறிக்கப்படுவாள் என்பதனைக் கூறிய தோழியை நோக்கி, “யான் ஆண்டுவந்து இரவுக்குறியில் தலைவியைக் கண்டு செல்வேன். அப்பால் வரைந்து கொள்வேன்” என்று தலைவன் கூற, அதுகேட்ட தோழி, “நீ, நின் அன்பின் மிகுதியால் வழியின் ஏதம் பாராது வருகின்றுய்; இவள் அதற்கு அஞ்சுவாள் என்று கூறி வரைவுகடாயது” என முன்னுரையாக எழுதியுள்ளார்.

“கொடுங்கான் முதலைக் கோள்வ லேற்றை
வழிவழக் கறுக்கும் கானலம் பெருந்துறை
இனமீ னிருங்கழி நீந்தி நீநின்
நயனுடை மையின் வருதி யிவடன்
மடனுடை மையி னுயங்கும் யானது
கவைமக நஞ்சுண் டாஅங்கு
அஞ்சுவல் பெருமவென் னெஞ்சத் தானே” (குறுந் - 324)

என்பது செறிப்பறிவுறுக்கப்பட்டு “இராவாரா வரைவல்” என்றுக்குத் தோழி அது மறுத்து வரைவுகடாயது.

உ. வே. சா. அவர்கள் இந்தச் செய்யுளுக்குத்—தலைவ! நீ நினது அன்புடைமையால், வளைந்த காலினையுடைய முதலையினது கொல்லுதல் வல்ல ஆணையது, வழியினிடத்தே பிறர்—செல்வதை நீக்கும் கானலையுடைய கரிய கழியை நீந்திக் கடந்து வருகின்றாய். இத் தலைவி, தன் அறியாமை யுடைமையினால் வருந்துவாள். யான் என் மனத்தினுள்ளே இரட்டைப்பிள்ளைகள் நஞ்சுண்டால் இருவர் திறத்தும் தாய் வருந்துவதுபோல நீ அங்ஙனம் வருதலை அஞ்சுவேன்'' எனப் பொருளும்,

'பெரும, நீ நயனுடைமையின் நீந்தி வருதி; இவள் தன் மடனுடைமையின் உயங்கும்; யான் அஞ்சுவல்' என முடிபும் எழுதியுள்ளார்.

'நீ அன்பினால் வருதலின் நீ வருதலைத் தடுத்தலும் தக்கதன்று; நினக்கு ஏதம் வருமோ என இவள் உயங்குதலின் இரவுக் குறி நேர்தலும் தக்கதன்று. நும்மிருவர்க்கும் துன்பம் உண்டாகும் இந்நிலையில் இரட்டைப்பிள்ளைகள் நஞ்சுண்டால் இருவர் திறத்திலும் இரங்கும் தாயைப்போல, யான் இருவர் திறத்தும் இரக்கமுடையேன்' என்றாள். இவ் வுவமையினால் இரண்டு மகவினுக்கும் ஒருங்கே நஞ்சு தீர்க்கும் மருந்து தருதலே தக்கதாதல் போல, இருவர்க்கும் நன்மைதரும் வரைவே ஏற்புடைத்தென்ற வரைவு கடாதற் பொருளும் பெறப்படும் என விளக்கமும் எழுதியுள்ளார்.

இப் பாடலில் உள்ள சொற்களை நோக்கினால் இப் பொருளின் பொருத்த மின்மை புலப்படும். ''யானது, கவைமக நஞ்சுண் டாஅங்கு அஞ்சுவல்'' என்று தோழி, தான் அஞ்சுவதற்கே இவ் வுவமையைக் கூறியுள்ளாள் என்பது தெளிவாகத் தெரிகின்றது.

'கவைமக' என்றதற்கு இரட்டைக்குழந்தைகள் எனப் பொருள் கூறலும் பொருந்தாது. ஒட்டிப் பிறந்த இருகுழந்தைகளைப் பின்பு அறுவை செய்து தனித்தனி ஆக்கப்பட்ட குழந்தைகளையே அச் சொல் குறிக்கும். 'அபூர்வ சகோதரர்கள்' என்ற திரைப்படம் பார்த்தவர்க்கு இது புலனாகும். மேலும், மூத்த குழந்தையும் இளைய குழந்தையுமாகிய இரு குழந்தைகளாக 'நஞ்சுண்டு' இருந்தால் அவ் விருகுழந்தைகள் திறத்தும் தாய் இரங்காதிருப்பாளா? என்ற ஒரு கேள்வியைக் கேட்டுக் கொண்டால் இவ் வுவமையும் பொருளும் ஒத்துவரவில்லை என்பது புலனாகி விடும். கவைமக எனப் புலவர் குறித்த உவமையின் சிறப்பையும் சிந்திக்கச் செய்யும்.

மேலும், 'கவைமக நஞ்சுண்டாஅங்கு அஞ்சுவல்' என்று இருக்கின்றதேயன்றி ஒருதாய் வருந்துவதுபோல என்ற தொடர் பாடலில்

இல்லை. பாடலில் இல்லாத தாய் துடும் என வருவிக்கப்படுகின்ருள் என்பதும் சிந்தித்தல்வேண்டும். 'அஞ்சுவல்' என்றிருக்கின்றதே யன்றி 'இரங்குவல்' என இல்லை. இதனல்,

"இரட்டைப்பிள்ளைகள் நஞ்சுண்டால் இருவர்திறத்தும் இரங்கும் தாயைப்போல, யான் நும் இருவர் திறத்தும் இரக்க முடையேன்" என்ற விளக்கம் சிறிதும் பொருத்தமில்லாத விளக்கம் ஆதல் தெளியலாம். 'கவைமக நஞ்சுண் டாஅங்கு என்பதற்கு இரட்டைப்பிள்ளைகள் நஞ்சுண்டால் இருவர்திறத்தும் இரங்கும் தாய்போல' என்ற விரிவுரை எவ்வாறு வருவித்துக்கூற வியலும்? அப்படி வருவித்துக் கூறியும் பொருளும் உவமையும் பொருந்த வில்லையே! அஞ்சுவல் என்பதற்கு இரங்குவல் என்ற பொருளும் பொருந்துவதாயில்லையே!

யாருங்கூருத உவமை கூறிய சிறப்பால் இப் புலவர் 'கவை மகனர்' எனச் சிறப்புப் பெயர் பெற்றுள்ளார் என்பதை நோக்கும் போது, இவ் வுவமைக்குச் சிறப்புத்தரும் பொருள் இதுவன்று என்பது தெளிவு.

தலைவியும் தோழியும் பிரியா நண்பினர் என்பதை விளக்க "இருதலைப்புள்ளி னேருயி ரம்மே" என்று சொல்வதுண்டு. அக் கருத்தையே 'கவைமக நஞ்சுண்டாங்கு' என்ற உவமையால் இப் புலவர் விளக்குகின்ருர். தலைவியும் தோழியும் ஒட்டிப்பிறந்த கவை மகவு போன்ற ஒற்றுமையுள்ளவர்கள் என்பதை உளங்கொளல் வேண்டும். தலைவி, தலைவன் வரும் வழியின் ஏதத்தை நினைந்து, தலைவனது வலிமையை அறியாது வருந்துகின்ருள். 'இவள்தன் மடனுடைமையின் உயங்கும்' என்றது நினைக. தலைவி மடனுடை மையால் வருந்துவள் என்றது, ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளில் ஒன்று நஞ்சுண்டது போல்வது. தோழி, தலைவி வருந்துவதைக் கண்டு தனக்கு அவளோடுள்ள நட்புரிமையால், தலைவன் ஆற்றலை அறிந்திருந்தும் வருந்துவது, ஒட்டிப்பிறந்த இரு குழந்தைகளில் நஞ்சுண்ணுத குழந்தை நஞ்சுண்ட குழந்தை போலவே மயங்கி வருந்துவது போல்வது என உவமையை விரித் துப் பாகுபாடு செய்துகொள்ள வேண்டும்.

ஒட்டிப் பிறந்த இரு குழந்தைகளை அறுவை செய்து தனித் தனிக் குழந்தைகளாகச் செய்து வளர்த்தல் உண்டு. 'அபூர்வ சகோதரர்கள்' என்ற திரைப்படக் கதையில் இவர்களின் செயலைக் காணலாம். அவ்வாறு பிரித்துவிட்ட பின்னும் அவ் விருவரில் ஒருவர்க்கு வயிற்றுவலி என்ருல், மற்றக் குழந்தைக்கும்அவ் வயிற்று வலி வரும். ஒரு குழந்தை காலில் அடிபட்டு வருந்திஞல், அடி

படாத குழந்தைக்கும் காலில் நோயுண்டாகும். இதுவே கவை மகவின் செயல்களாகும். கவைமகவு என்பது பூவிரட்டையும் இலையிரட்டையும் போல ஒட்டிக் கொண்டு பிறந்த குழந்தையையே குறிக்கும்.

அந்த இரு குழந்தைகளில் ஒரு குழந்தை தெரியாமல் நஞ்சினை அருந்திவிட்டால் நஞ்சு அருந்தாத மற்றக் குழந்தையும் வருந்தி இறந்துபட நேரும். அதுபோலத் தலைவி நின் அஞ்சாமையும் வலிமையும் தெரியாதவள் வழியில் நினக்கு ஏதம் நிகழ்ந்தால் என்செய்வது என்று அஞ்சி வருந்துகின்ருள். அவள் வருந்தும்பொழுது அவளோடு பிரிவின்றியன்ற துவரா நட்பினையுடைய யான், நின் வலிமையும் ஆண்மையும் தெரிந்திருந்தும், தலைவி போலவே என் நெஞ்சு அஞ்சி வருந்துகின்றது. ஆதலால், இரவில் உப்பங்கழி வழியாக வரல்வேண்டா. விரைவில் தலைவியை வரைந்துகொண்டு இன்புறுக என்பதே தோழியின் அறிவுரை.

இங்குத் தலைவி தன் மடனுடைமையால் வருந்துவது, நஞ்சினல் கவைமகவில் ஒன்று வருந்துவது போன்றது; மடனுடைமை நஞ்சு போன்றது. தோழியின் மடனில்லாத நிலை நஞ்சருந்தாத மகவின் நிலை போன்றது. நஞ்சயின்ற மகவு வருந்துவது இயல்பு. நஞ்சயிலாத மகவு மயங்கி வருந்துவது ஒட்டிப் பிறந்த காரணத்தால் வந்தது. மடனுடைய தலைவி ஆற்றாறஞ்சி வருந்துதல் இயல்பு. ஆனல், தலைவனின் வலிமையும் ஆண்மையும் நன்கு தெளிந்த தோழி அஞ்சி வருந்துவது தலைவியோடு பழகிய பழக்கத்தால் வந்தது.

தலைவி அஞ்சி வருந்தும்போது, நின் பெருமையறிந்த என்னறிவு வேலை செய்யவில்லை. தலைவியோடு ஒற்றுமைப்பட்ட நெஞ்சு அவள் நெஞ்சுபோலவே அஞ்சுகின்றது எனத் தோழி தலைவனுக்குக் கூறிய உவமை எவ்வளவு அருமையான உவமை! இத்தகைய உயர்ந்த உவமையைக் கூறியதனலன்ரே புலவர் 'கவை மகனர்' என்று சிறப்புப் பெயர் பெற்ருர் !

தோழி கூறியது என்னை ?

வளைந்த கால்களையுடையதும் கொலைத் தொழிலில் வல்லதும் ஆகிய ஆண் முதலை, அவ் வழியில் நீந்தி வந்தோர் சிலரைக் கொன்றமையால் அவ் வழியில் பிறர் வாராமல்—வழங்காமல்—செய்துவிட்டது. அப்படிப்பட்ட—கடற்கரைச் சோலையை அடுத்துள்ள பெருந்துறையுடையது உப்பங்கழி; இனமாகிய மீன்கள் வாழ்கின்றன. அந்த உப்பங்கழியில். தீமை செய்யும் முதலைகள்

இருப்பதுபோலவே, தீமை செய்யாத மீன்களும் நிறைந்ததாகவே அவ் வுப்பங்கழியுள்ளது. முதலைகளின் கொடுமை நினையாது தலைவி பால் வைத்த அன்புடைமையால் நீ நின் வலிமையே துணையாக அஞ்சாது வருகின்றாய். நின் ஆண்மையும் வலிமையும் போற்றத் தக்கன, தலைவி தன் அறியாமையுடைமையால் நீ வரும் வழியின் ஏதம் நினைந்து அஞ்சி வருந்துகின்றாள்.

யானோ, நின்னாண்மையும் வலிமையும் அஞ்சாமையும் தெரிந் தவள்தான். ஆயினும், தலைவியோடு ஒன்றிப் பழகிய பழக்கத்தால் என்னறிவு பயன்படவில்லை. வேலை செய்யவில்லை. தலைவி அஞ்சி வருந்துவதைக் கண்டு யானும் என் நெஞ்சினால் அஞ்சுகின்றேன். எனவே, நீ இனி இந்த முதலைகள் நிறைந்த கடுமையான வழியில் இரவில் வரல்வேண்டா; விரைந்து வந்து வரைந்துகொள்க என்ற கருத்துக்களெல்லாம் எச்சப் பொருளாய் வந்து இயையத் தோழி தலைவனுக்குக் கூறினாள் என்பதே இப் பாடலின் திரண்ட கருத் தாகும்.

இரட்டைக் குழந்தைகள் நஞ்சுண்டது கண்டு தாய் இருவர் திறத்தும் வருந்துதல் போல என உவமையை விரித்தல் பொருத்த மன்று என்பது தெளிவாகும்.

பழந்தமிழ்ப் புலவோரின் கல்விச் சிறப்பு

பண்டைக் காலத்துச் செந்தமிழ்ப் புலவர் தமது தமிழ் மொழியை ஆழ்ந்து கற்றது, அதுகொண்டு பொருளீட்டு தற்கு மட்டும் அன்று; அரசியலில் உயர்ந்த நிலைமைகளைப் பெறுதற்கும் அன்று. உலக இயற்கை மக்கள் இயற்கைகளில் ஆழ்ந்து மறைந்தும் மேன்மிதந்து விளங்கியும் உள்ள அரும் பொருள்கள் நுட்பங்கள் அழகுகளை யெல்லாம் ஒருங்கினி தறிந்து, அவ்வாற்றால் தமது அறியாமை நீங்கி அறிவு விளங்கி மேன்மேற் பெருகும் இன்பத்தில் திளைத்தற்கேயாம்.

—மறைமலையடிகள்

(முற்கால பிற்காலத் தமிழ்ப் புலவோர், பக்கம் : ௯௦)

இயற்கை ஓவியம்—காவற் கடமை

[புலவர் இரா. இளங்குமரன்]

காவல், தனிவாழ்வுக்கும் வேண்டும்; பொது வாழ்வுக்கும் வேண்டும். காவல் இல்லையானால் கட்டு அழியும்; கெட்டுத் தொலையும். காவல் இன்றியமையாதது; ஆதலால், தமிழர் கைகளில் காப்பு அணிந்தனர்; விழாவுக்குக் காப்புக் கட்டினர்; ஊருக்குக் காவல் தெய்வம் வைத்தனர்; காவற்கடவுளும் கண்டனர்.

அரண்சூழ்ந்த காவல் காடு 'கா' எனப் பெற்றது. பின்னர் மரக்காடும், பூஞ்சோலையும் காக்கள் ஆயின; பொலிவு நயம் கூர்ந்து 'பூங்கா'வும் ஆயது.

காத்தலில் வல்ல வேந்தன் காவலன் எனப் பெற்றான். காவாக இருந்த வேந்தன் கோவாகவும் விளங்கினான். அவன் வாழ்ந்த மலை 'கோயில்' ஆயது. இவை காவல் சிறப்புக்கள்.

காவல் வகை இரண்டு; அவை, அகக்காவல், புறக்காவல் என்பன. அகக்காவல் நிறைகாவல்; புறக்காவல் சிறைகாவல். அகக்காவல், உள்ளிருக்கும் நன்மை வெளிப்போகாமல் காப்பது; புறக்காவல், வெளித்தீமை உட்புகாமல் காப்பது. தன் மாடு தொழுவத்தை விட்டுப் போகாமலும் இருத்தல் வேண்டும்; ஊர்மாடு தோட்டத்துள் புகாமலும் இருத்தல் வேண்டும். இத்தகையவை அகக்காவலும் புறக்காவலும்.

தோட்டத்திற்கு வேலி வேண்டும்; இல்லையேல் கட்டுக் குலையும். வேலி என்பது வேலால் அமைந்தது. அவ் வேல் இரு வகைப்படும். ஒன்று வெள்வேல்; மற்றொன்று கருவேல்; வேல முட் படலையை வேலியாக ஊன்றுதல் இன்றும் காணக் கூடியதே.

பயிரைக்காக்க வேலி வேண்டுவது போல உயிரைக் காக்கவும் வேலி வேண்டும். அவ் வேலியே நிறைகாவலும் சிறை காவலும். ''தாலிக்குவேலி தார்மன்னனே'' என்பதொரு தனிப்பாடல்.

நிறையாவது நிறுத்தும் தன்மை; நேர்மை பிறழாமல், ஆடாமல் அசையாமல் நிறுத்தும் கோலே நிறைகோல் என்பது அறிக.

சிறையாவது புறஞ்செலாது அடக்கிக் காத்தல்; பருந்து, வட்டமிட்டு வளைந்து வருங்கால் குஞ்சுகளைக் காக்கத் துடிக்கும் கோழி, தன் சிறகுகளுக்குள் அவற்றை ஒடுக்கி வைப்பது போல ஓரிடத்துக் காவலுள் ஒடுக்கி வைத்தல். குஞ்சினைக் கொண்டு செல்லும் வல்வாய்ப் பருந்தின் சிறகுகளுக்குள் அகப்பட்டு அலமறும் குஞ்சுபோலச் சிறைகாவலில் துயரும் உண்டு! சிறகு என்பதும் சிறை என்பதும் ஒரு பொருள் தரும் பழந்தமிழ்ச் சொற்களே! செறிந்த காடு 'சிறைக்காடு' எனப்படுதல் உலக வழக்கே.

'சிறையிற் சிறந்தது நிறையே' என்பது அறவோர் கண்ட முறை. அந் நிறை ஆடவர்க்கும் வேண்டும்; மகளிர்க்கும் வேண்டும்; ஆடவர் நிறை ஆண்மை எனப்படும்; மகளிர் நிறை கற்பு எனப்படும்.

நிறை முதிர முதிரச் '**சால்பு**' ஆகும். சால்புடையார் சால்பாளர், சான்றோர் ஆவர். இவை பாற்பொதுச் சொற்கள். சால்பாளர் இலரேல் உலகம் தன் சுமை தாங்காது மடியும்!

"வாழ்வின் அடிப்படைக் காவல் வாழ்வார் அனைவருக்கும் வேண்டும்" என வாழும் தமிழர் நினைத்தனர். அதனை அரிய இயற்கை ஓவியமாகத் தீட்டிக் காட்டினர். அவர் காட்டியவற்றுள் ஒன்று சங்கச் சான்றோர் கபிலர் பெருமான் தீட்டியது.

கபிலர், மாந்தர் காவல் திறனையோ குறித்தார்? பின்னுளைப் பாரதியார், "பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றில் படுத்துப் புரளாதே, வென்றியை நாடி வானத்தில் ஓட விரும்பி விரைந்திடுமே" என்று பாடினரே, அந்தப் பன்றியின் மாண்புக் காவல் திறனையே குறிப்பிடுகிருர். வழிகாட்டும் திறன் எதற்குத் தான் இல்லை! ஆற்றலாளியின் பார்வை அதன்மேல் படவேண்டும்; அவ்வளவுதான்.

ஒரு காட்டுப்பன்றி; ஆண்பன்றி; அதற்குப் பெட்டையுண்டு. குட்டிகளும் உண்டு. பண்பட்ட வாழ்வில் தலைப்பட்டு நிற்கிறது அப் பன்றிக் குடும்பம். அக் குடும்பத்திற்கு ஒருநாள் அடுத்தடுத்துத் தொல்லைகள் சூழ்கின்றன. அவற்றையெல்லாம் வெற்றி கொண்டு வீறுநடைபோடுகின்றது பன்றி! பகுத்தறிவு வாய்ந்த மனிதனையும் தன் பெருமிதத்தால் தலைவணங்க வைக்கிறது.

செய்தி இது :

செறிவு மிக்க காட்டில் உள்ளது பன்றி; நாட்டுப்பன்றி அன்று; காட்டுப்பன்றி; கண்ணுழையாக் காட்டிலும் கடிய வேடர் நுழைந்து விட்டனர். அவர்களொடு வந்த வேட்டை நாய்கள்

செடிகொடிகளைத் துளைத்துக்கொண்டு புகுந்துவிட்டன. வேட்டையில் பழகிப்போனவை அந் நாய்கள்; வேடர்களும் அத்தகையரே; நாய்களின் பார்வை குட்டிகள்மேல் பட்டது; வேட்டுவர் பார்வை பெட்டைமேல் பட்டது! இரண்டு நிலைகளும் பன்றிக்குத் தெளிவாயிற்று.

குட்டிகள் இளமையானவை; துடிப்பானவை; வலியவை; ஆனல், வேட்டை நாயின் சூழ்ச்சித் திறம் அறியாதவை. அவை வெருட்டி வெருட்டி அலைக்கழித்தன; குட்டிகள் அஞ்சி அலறின; ஓடி ஓடித் தவித்தன! தான் வாழும் உரிமைக் காட்டுக்கு வந்து வேட்டைநாய் படுத்தும் பாட்டைப் பார்த்ததும் பன்றி சிலிர்த்தது; கொடுமையாய் எழுந்தது. வேட்டை நாய்கள் அலற அலற அறைந்து தாக்கியது! கந்து கந்தாக ஓடி ஒளிந்தன நாய்கள்!

இளைய குட்டிகளை முதற்கண் காத்த பின்னே, பெட்டையின் பக்கம் பன்றி தன் பார்வையைத் திருப்பியது. போரிட்ட கொதிப்பும் உணர்ச்சியும் குறையவில்லை; கொதிப்போடு கிளர்ந்தது; ஒரு பேய்த் தாக்குதலைத் தொடுத்தது. கொடிய வில்லை வளைத்துக் கூரிய கணையைக் கோத்துக்கொண்டிருக்கின்றனர் வில்லாளர். மாறி மாறி அறைந்த அறையிலும் மோதலிலும் வில்லைப் போட்டுவிட்டு வியர்வை கொட்ட ஓடினர். கூட்டோடு குடும்பத்தைக் கெடுக்க வந்த கொடுமையை ஒருங்கு அழித்துப் பெருமை கொண்டது பன்றி. பெருமித நடையில் குட்டிகள் பெட்டையைச் சூழ்ந்துவர அவற்றை யெல்லாம் ஒருங்கே அழைத்துக்கொண்டு தடைபல கடந்து படை நடத்திச் செல்லும் தானைத் தலைவன் போலக் காட்டுள் புறப்பட்டது.

அடர்ந்திருண்ட காடு; அக் காட்டை அரிதின் நுழைந்து நுழைந்து செல்கின்றன; ஒரு புதைவெளி புலப்படுகின்றது. அதன் அருகில் ஓர் இட்டிடை வழியுள்ளது. அவ் வழியைக் குறுக்கே தாண்டி அப்பால் செல்ல நினைக்கின்றது பன்றி. வேட்டை நாய்கள், வேடர்கள், கொடு விலங்குகள் நினைவு பன்றிக்கு உண்டாகின்றது. புதையுள் ஒடுங்கி நின்று-இடைவிடாமல் பல்வேறு ஊர்திகளும் ஓடும் சாலையைக் கடப்பதற்கு இடப்பாலும் வலப்பாலும் பார்ப்பவர் போல-இப்பாலும் அப்பாலும் பார்க்கின்றது. ‘அஞ்சும் பகை இல்லை’ என்று தெளிந்ததும் இடைவெளியைப் பாதுகாப்புடன் கடக்கின்றது. ஆனல், ஒருவன் பன்றிக் குடும்பத்தைக் கண்ணிமைக்காமல் பார்த்து நிற்கின்ருன். கையில் வில்லும் அம்பும் கொண்ட வேடன்தான் அவன். ஆனல், நாட்டு வேடன் அல்லன்; காட்டுவேடன்! பன்றியை எய்தலை விடுத்து எண்ணிப் பார்க்கிருன்:

"இப் பன்றியின் ஆண்மை என்னே! பெருமிதம் என்னே! நாடுகாக்கும் என் பெருமை மிக்க தலைவன் போன்ற பெருமிதம் உடையதாகவன்றோ உள்ளது! இப் பெருமிதம் வாழ்க" என வாழ்த்துகிறான்; நெஞ்சத்தால் பாராட்டி நேயத்தால் தலை வணங்கு கின்றான். அவன் நோக்கு கொலை நோக்கு இல்லை! ஆண்மையை மதிக்கும் பெருமித நோக்கு.

முன்னொரு நாள் பகைவர் மூண்டெழுந்து மோதினர்; படை யெல்லாம் அஞ்சி அலறத் தாக்கினர்; எதிரிட்டு நிற்க ஆற்றாமல், மடைதிறந்த வெள்ளம் எனப் படையழிந்து ஓடியது. ஆனால், படைத்தலைவன், தான் ஒருவனாக நின்று பெருகி வரும் வெள்ளத் தைப் பெருங்கல்லணை தடுத்து நிறுத்துவதுபோல நிறுத்தினான்; எதிர்ப்படை நிலையழிந்தோடத் தாக்கினான். அதனைச் சான்றோர் 'பெருமை' என்று பாராட்டினர். அப் பெருமிதக் காட்சியை நேரில் கண்டும், பாராட்டியதைக் கேட்டும் பூரித்தவன் இக் கானவன்! அக் கானவர் தலைவன் பெருமிதம், இப் பன்றியிடத்தும் இருக்கக் கண்டு வியந்தான்! போற்றினான்! எம் 'பெருவிறல் போன்ம்' எனப் பாராட்டி அதனை 'எய்யாது பெயர்'ந்தான்!

கபிலர் வரைந்த சொல்லோவியம் இது. காவல் கடமை, பேராண்மை, ஆண்மையை மதித்தல் ஆகிய அரும் பண்புகளை எவ்வளவு எளிமையாகத் தீட்டிவிட்டார்! இப் பண்புகள் வீட்டுக்கும் வேண்டும்! நாட்டுக்கும் வேண்டும்! இதை முதற்கண் கண்டுகொள்ள வேண்டுமே!

"வயகாய் எறிந்து வன்பறழ் தழீஇ
இளையர் எய்துதல் மடக்கிளை யோடு
நான்முலைப் பிணவல் சொலியக் கானொழிந்து
அரும்புழை முடுக்கர் ஆட்குறித்து நின்ற
தறுகட் பன்றி நோக்கிக் கானவன்
குறுகினன் தொடுத்த கூர்வாய்ப் பகழி
மடைசெலல் முன்பில்தன் படைசெலச் செல்லாது
அருவழி விலக்கும்எம் பெருவிறல் போன்மென
எய்யாது பெயரும் குன்ற நாடன்." —அகநானூறு. 248

———

வயம் - வலிமை; பறழ் - குட்டி; நான்முலை - தொங்கும் மடி; பிணவல் - பெட்டை; சொலிய - பெயர; புழை - வாயில்; தறுகண் - அஞ்சாமை; பகழி - அம்பு; முன்பு - கடுப்பு; பெருவிறல் - பெரிய வலிமையாளன்.

"ஆந்திரர் சேரமரபினர்"

[பேராசிரியர். இரா. மதிவாணன்]

(முன் இதழ் ௨0௬-ஆம் பக்கத் தொடர்ச்சி)

இதனைத் தமிழரும் கன்னடியரும் முறையே 'மிளகு', 'மெணசு', என்று வழங்க, சேரரும் ஆந்திரரும் இதனை மிரியல் என்றே பண்டு தொட்டு வழங்கி வருகின்றனர். மலையாளம் தனி மொழியாகப் பிரிந்த பிறகு மிளகைக் குறிக்க 'குருமிளகு' என்னும் சொல் தோன்றிற்று. மிளகாயின் வருகைக்குப்பின் கொட்டை மிளகைக் குறிக்க 'குருமிளகு' பயன்படுத்தப்பட்டது. தெலுங்கில் 'மிரியல்' என்பது இன்றும் மிளகைக் குறிக்கும் சொல்லாக வழங்கி வருகிறது.

கன்னடியரும் தமிழரும் 'இருக்கிறது' என்னும் வினைச் சொல்லைப் பெருகப் பயன்படுத்துகின்றனர். மலையாளிகளும் தெலுங்கரும் 'உள்ளது' என்னும் வினைச் சொல்லையே ஆள்கின்றனர். செய்யூ என்னும் வாய்பாட்டுத் தொடர் நிகழ்கால வினையெச்சம் தமிழிலும் கன்னடத்திலும் பேச்சு வழக்கில் இல்லை, தெலுங்கிலும் மலையாளத்திலும் இன்றும் இது பேச்சு வழக்கில் உள்ளது, தெலுங்கில் 'வஸ்தூ உன்னாடு' (வந்து கொண்டிருக்கிறான்), 'அடுகுதூ உன்னாடு' (கேட்டுக் கொண்டிருக்கிறான்) எனவும், மலையாளத்தில், 'செய்யூ இல்ல', 'வரூஉ இல்ல' எனவும் வழங்கி வருதலைக் காணலாம்.

நாளை என்னும் சொல் தமிழிலும் கன்னடத்திலும் வழங்குகிறது. இரவு என்னும் சொல் பழங்காலப் பேச்சுத் தமிழில் விடியற் காலையைக் குறித்துப்பின் மறுநாள் (நாளை) என்றும் பொருள் பட்டது. இன்றும் சேர நாட்டில் விடியற் காலையில் வந்தான் என்பதை 'ராவிலே வந்நு' என்கின்றனர், 'இரவு' மலையாளத்தில் 'ராவு' என்றும் தெலுங்கில் 'ரேபு' என்றும் திரிந்துள்ளது. தெலுங்கில், 'நாளை வருவான்' என்பதை 'ரேபு வச்சுனு' என்பர்.

படர்க்கை வினைமுற்றுக்களில் பாலீறு வெளிப்பட்டு நிற்குமாறு பேசுவது தமிழரிடையிலும் கன்னடியரிடையிலும் காணப்படுகிறது. பால் காட்டும் ஈறுகள் வெளிப்படாமல் வினைமுற்றுக்களை மரூஉ வழக்காகக் குறுக்கி 'அவன் வந்நு' (அவன் வந்தான்) என மலையாளிகளும் 'வாடு வச்சி' எனத் தெலுங்கரும் நாட்டுப்புறங்களில் பேசி வருகின்றனர்.

அரிது என்னும் குறிப்பு வினைமுற்றைத் தெலுங்கில் ராது (அரிது) என்றும் மலையாளத்தில் அருது என்றும் வழங்கி வருகின்றனர். 'உண்ணருது' (உண்ணக்கூடாது) என மலையாளிகளும் 'உண்டராது' (இருக்கக்கூடாது) எனத் தெலுங்கரும் பேசு

கின்றனர், தமிழிலும் கன்னடத்திலும் இச் சொல் பேச்சு வழக்கில் இல்லை,

வருதல் போதல் போன்ற தொழிற் பெயர்கள் மலையாளத்திலும் தெலுங்கிலும் 'தல்' 'அல்' ஈறு பெறுமல் அகர ஈறு பெறுகின்றன. கேள்குக, பாடுக என மலையாளத்திலும் 'வச்சு(ட்)ட' (வருதல்) 'அடுகு(ட்)ட' (கேட்டல்) எனத் தெலுங்கிலும் வழங்கி வருகிறது.

மேலும் சில ஒப்புமைச் சொற்கள் :

மலையாளம்		தெலுங்கு
நெடுப்பு	(நீளம்)	நிடுப்பு
பொக்கம்	(உயரம்)	பொடுகு
அளியன்	(மருமகன்)	அல்லுடு
செறுப்பத்தில்	(இளமையில்)	சின்னப்புடு
எந்தினு	(எதற்கு)	எந்துகு

மேற்கண்ட மொழியியல் ஒற்றுமைகள் மலையாளத்திற்கும் தெலுங்குக்கும் மட்டும் ஏன் அமையவேண்டும்? இவை எக் காலத்தில் ஏற்பட்டன என்று கேட்கும் வினுக்களுக்கு இவ் விரு மொழியினரும் ஒரே மொழியினராய் ஓரிடத்து வாழ்ந்தவர் என்பதே தக்க விடையாகும்.

2. இடப்பெயர் மக்கட் பெயர்ச்சான்றுகள் :

பொழில் என்னும் சொல் ஊர், நகரம் என்றும் பொருள் பட்டது. சேர நாட்டில் மேற் பொழில் கீழ்ப் பொழில் என்னும் இரண்டு ஊர்களும் இப்பொழுது மேப்ராலு கீப்ராலு எனத் திரிந்து வழங்குகின்றன. ஆந்திர நாட்டில் 'செம் பொழில்' என்னும் ஊர் 'செம்ப்ரோலு' என வழங்கிவந்தது. பிறகு அதன் பெயரை ரத்னபுரி என மாற்றிவிட்டனர். ஆந்திரத்திலும் மலையாளத்திலும் இவ்வாறு எத்துணையோ பழம் பெயர்கள் மாற்றப்பட்டுவிட்டன. வடமொழியின் தாக்கத்தால் திரவிட இன வரலாற்று உண்மைகள் மறைக்கவும் அழிக்கவும் படுகின்றன என்பதற்கு இதுவும் ஒரு சான்ருகும்.

ஆந்திரர் என்னும் பெயர், அந்துவர் என்னும் சேரர் பெயரினின்று வந்தது அல்லது அண்டிரன் என்னும் சேரக்குடி மன்னனின் பெயரினின்று வந்தது என்னும் கருத்துக்களை ஆந்திர வரலாற்று ஆசிரியர்களும் மேற்கோளாகக் காட்டி வருகின்றனர். சேரர்க்கே உரிய பெயர்களுள் ஒன்று பொறையன். இப் பெயர் கொண்ட ஆந்திர நாட்டு மன்னரும் வள்ளல்களும் கல்வெட்டுக்களில் குறிக்கப்பட்டுள்ளனர்.[1]

---

1. மேலும் இவற்றின் விளக்கங்களை, வெளிவரவிருக்கும் என்னுடைய 'ஆந்திரர் சேரமரபினர்' என்னும் நூலில் காண்க.

3. வரலாற்றுச் சான்றுகள் :

தொன்று தொட்டுச் சேர மன்னர்க்கும் ஆந்திர மன்னர்க்கும் நெருங்கிய உறவு இருந்து வந்துள்ளது. சேரன் செங்குட்டுவனுக்கு நூற்றுவர் கன்னர் நெருங்கிய நண்பராயிருந்தனர். சேரர் மடல் வாணிகத்திலும் கடற்படையிலும் வலிமை பெற்றிருந்தனர். ஆந்திரரும் தம்மை இருகடல் (கீழ்க்கடல் மேற்கடல்) மன்னர் என அழைத்துக்கொண்டனர். கப்பல் வணிகத்தில் சிறந்தவனே நாவாய்கன் - நாய்கன் எனப்படுவான். ஆந்திரரில் பெரும் பாலோர் நாய்க்கன் என்னும் குடிப் பெயருடையவராய் இருக்கின்றனர்.

ஏய்த்து விட்டான் (மோசடி) என்பதை மலையாளிகளும் தெலுங்கரும் ‘கும்பகோணம் செய்து விட்டான்’ என்கின்றனர். இதன் தொடர்பான வரலாற்றுச் செய்தி இவ் விருவர்க்கும் பொதுவானதாக இருக்குமா எனக் கண்டறியக் கூடவில்லை.

4. பழக்க வழக்கச் சான்றுகள் :

ஆரியத் தாக்குதலால் இவ் விரு சாராரிடையும் அவர்க்கேயுரிய பழக்க வழக்கங்கள் பலவும் மறைந்துவிட்டன.

சேர இனத்தார்க்கு என்று சிறப்பாக உள்ள வழக்கம் விழா நாள்களில் பனை ஓலை இளஞ்சுருளை மகளிர் காதில் அணிந்து கொள்ளுதல், கழுத்திலும் பனந் தோட்டு மாலையணிதல் ஆகியவை. கி. பி. முதல் நூற்றாண்டில் ஆந்திர நாடாண்ட சாதவாக மன்னன் ஆளன் காலத்தில் தொகுக்கப்பட்ட ‘காதா சப்த சதி’ என்னும் நூலில் பொன் அணிகலன்களை அணிந்தாலும், விழா நாளில் பனை ஓலைக் காதணியை அணிய வேண்டிய கட்டாயமான வழக்கம் இருந்தது எனக் கூறப்பட்டுள்ளது. அறப்பழங் காலத்தில் பனை ஓலைச் சுருளையே தாலியாகவும் அணிந்தனர் என்று தெரிகிறது. ஏனெனில் பனையின் பெயரான போந்தை என்பதே தெலுங்கில் பொட்டு (தாலி) எனத் திரிந்துள்ளது.

மலையாளத்தார்க்கு ஓணமும் தெலுங்கர்க்குத் திருப்பதி ஏழுமலையானும் சிறந்த விழாவுக்குரியனவாயுள்ளன. இது பிற்கால வளர்ச்சியெனினும் பழங்கால உறவுகளை முறையாக ஆராயப் பலரும் முயற்சி மேற்கொண்டால் திரவிட இனத்தார் தமிழ் ஒன்றே பேசி ஒரே இடத்தில் வாழ்ந்து எவ்வாறு பிரிந்து வாழ்கின்றனர் என்பதை அறியலாம். பழைய வரலாற்றை அறிவது பிரிந்த இனத்தார் ஒன்று கூடி வாழவும் ஒற்றுமை வளரவும் வழி வகுக்கும்.

———

வான்புகழ் வள்ளுவர்

[வ. வேம்பையன்

அமைப்பாளர், கல்பாக்கம் கலைஅறிவியல் மன்றம்]

மாமல்லபுரத்தில் தமிழ்நாட்டுச் சிற்பக்கலைப் பயிலகத்தில் வான்புகழ் வள்ளுவரின் 12 அடி உயரமுள்ள உருவச்சிலை செய்து அமைக்கப்பட்டிருக்கிறது.

திருவள்ளுவரின் திருவுருவத்தை வெவ்வேறு கோலங்களில் இக் காலச் சிற்பிகள் அமைத்திருக்கிறார்கள். வலக் கையில் எழுத்தாணி பிடித்து, இடக்கையில் குறள் ஏடு ஏந்தி, சடைமுடி புனைந்து, தாடி - மீசை விளங்க இருக்கையில் அமர்ந்த உருவமாக அமைக்கப் பெற்றிருப்பது முதற் கோலமாகும். இத் தகைய படிமத்தைச் சென்னை மயிலையில் காணலாம். இது தமிழக அரசினால் ஏற்றுக் கொள்ளப் பட்ட படத்தை முற்றிலும் தழுவிய படைப்பாகும்.



இடக்கையில் குறள் ஏடு பிடித்து, வலக்கையால் "முப்பால் முத்திரை" காட்டி, சடைமுடியும் தாடிமீசையும் கொண்டு விளங்க, அரச லிங்கத்தவ இருக்கைக் கோலத்தில், உலகப் பேராசிரியர் என்ற கருத்தை உணர்த்தி ஆறுகால் பீடத்தின்மீது அமர்ந்து அறம், பொருள், இன்பம் ஆகிய வாழ்க்கை நெறிகளை வெளிப்படுத்தும் தோற்றத்தில் திருவள்ளுவரின் திருவுருவம் வள்ளுவர் கோட்டத்தில் அமைக்கப்பெற்றிருக்கிறது. இஃது இரண்டாவது கோலமாகும்.

வாழ்க்கையின் சிறப்பான நெறிமுறைகளை முப்பாலாக வகுத்துத் தமிழ்ப் பெருங்குடி மக்களுக்கும், ஏனைய உலக மக்கள்

திருவள்ளுவர் சிலை - நினைவாலயம் கால்கோள்விழா

கன்னியாகுமரி (15-4-79)




மறைமலையடிகள் நூல்நிலையம் அமைத்த
திருக்குறள் நூற்காட்சியினை
மத்திய எரிபொருள் அமைச்சர், மாண்புமிகு
பா. இராமச்சந்திரன் அவர்கள் திறந்துவைத்தல்




கழக ஆட்சியாளர் மத்திய அமைச்சருக்குத்
திருவள்ளுவர் விழாமலரைப் பரிசாக அளித்தல்

கன்னியாகுமரி
தொடர்வண்டி நிலையத்
திறப்புவிழா (15-4-'79)



கன்னியாகுமரி தொடர்வண்டி நிலையத்தில்
முதல் வண்டியை இந்தியத் தலைமை அமைச்சர்
மாண்புமிகு மொரார்சி தேசாய் அவர்கள் ஓடவிடுதல்



குமரிமுனையிலிருந்து திருவனந்தபுரத்துக்குப்
புறப்படும் புதிய தொடர்வண்டி

தொகையினருக்கும் உலகப் பொது மறையாக வழங்கி, அன்றுபோல் இன்றும் வாழ்க்கை என்ற கப்பலுக்குத் திசை காட்டும் கலங்கரை விளக்கமாகப் புதியதொரு தோற்றம் மாமல்லபுரச் சிற்பிகளின் உள்ளத்தில் முகிழ்த்து வெளியிடப்பட்டுள்ள உருவமாகும்.

நின்ற கோலத்தில் வலக்கையை உயர்த்தி "முப்பால் ஒளி" ஏந்தி இடக்கையில் குறள் ஏட்டைப் பிடித்து முப்பால் நெறியை உணர்த்தும் இக் கோலம் மூன்ருவது வகையைச் சாரும். பண்டைய காலத்தில் புத்தன் என்ற பெருமகனைப் பல்வேறு கோணங்களில் நம் நாட்டுச் சிற்பிகள் சமைத்தார்கள். அம் மரபிற்கு இணங்க அண்மைக் காலத்தில் வள்ளுவரைப் பல்வேறு கோலங்களில் சிற்பிகள் படைக்கத் தொடங்கி இருக்கிருர்கள்.

மாமல்லபுரச் சிற்பிகளின் கலையுணர்வில் முகிழ்த்த இவ் வறிவுச் சுடர் மிக அழகிய அமைப்பைக் கொண்டு விளங்குகிறது. சுண்ணச் சாந்திஞல் செய்யப்பட்ட இப் படிமத்தை ஏறக்குறைய 15,000 மக்கள் கண்டு பாராட்டி இருக்கிருர்கள். திருவள்ளுவர் திருநாளான 15-1-1979 அன்று தமிழகச் சட்டப் பேரவைத் தலைவர் மாண்புமிகு முனு ஆதி அவர்கள் திருவள்ளுவர் திருவுருவத்தைத் திறந்து திருவடிகளில் மலர் வைத்து வணங்கி மகிழ்ந்தார்கள்.

15-1-79 ஆம் நாள் மாமல்லபுரத்தில் பயிற்சி பெறும் சிற்பக் கலை மாணவர்கள் கல்லாலும், வண்ணத்தாலும், சுதையாலும், மரத்தாலும் பல சிற்பங்களைச் செய்து தனியொரு சிற்பக்கலைப் பொருட் காட்சியினை நடத்திஞர்கள். அக் காட்சிக் கூடத்தைக் கூட்டுறவு அமைச்சரின் பேரவைச் செயலாளர் மாண்புமிகு ஆனூர் கோ. செகதீசன் அவர்கள் விளக்கேற்றித் தொடங்கி வைத்தார்கள்.

சிற்பக்கலைப் பயிலகத்தில் சுதைச் சிற்பப் பிரிவு ஆசிரியரும் மாணவர்களும் ஒருங்கிணைந்து படைத்தளித்த திருவுருவமே 'வான் புகழ் வள்ளுவர்' படிமமாகும்.

வான்புகழ் வள்ளுவரின் வடிவத்தைப் புதிய கோலத்தில் அமைத்தும் சிற்பக்கலைப் பொருட்காட்சியை ஏற்பாடு செய்தும் தமிழர் திருநாளைச் சிறப்பாகக் கொண்டாடிய மாமல்லபுரச் சிற்பக் கலை பயிலகத்தின் கண்காணிப்பாளராகிய சிற்பச் செம்மல் வை. கணபதி அவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் ஆகிய அனைவரையும் அவர்களுக்கு ஆதரவு அளித்த தமிழ்நாட்டு அரசையும் பாராட்டுகிரேம்.

ஆண்டு தோறும் இப் பொருட்காட்சியைத் திருவள்ளுவர் திருநாளில் (சன 15) தொடங்கி இரு கிழமை நடைபெற ஆவன செய்ய அரசையும் அதிகாரிகளையும் அன்புடன் வேண்டுகிரேம்.

———

குரு சுப்பிரமணியரின் குறள் மொழிபெயர்ப்பு

அவாய்த் தீவுகளில் சைவசித்தாந்த திருச்சபையை அமைத்து அமெரிக்க மக்களிடையே சைவசமயக் கருத்துக்களைப் பரப்பிவரும் மாஸ்டர் சுப்பிரமுனியா என்னும் குரு சுப்பிரமணியம் அவர்கள் அண்மையில் திருக்குறள் அறத்துப்பால் 38 அதிகாரங்களிலிருந்து அதிகாரத்துக்கு நான்கு குறள்களை மட்டும் தேர்ந்தெடுத்து Holy Kural: Scripture of Saivite Hinduism' என்ற தலைப்பில் சிறு நூலொன்று வெளியிட்டுள்ளனர்.

திருமூலரின் திருமந்திரத்தை ஆங்கிலத்தில் வெளியிடும் பணியை ஏற்றுக்கொண்டுள்ள குரு சுப்பிரமணியர் அதன் முதல் தொகுதியை அண்மையில் சென்னைக்கு வந்திருந்தபோது விழா வொன்றில் வெளியிட்டார். இதனைச் சிறந்த முறையில் ஆங்கில ஆக்கம் செய்தவர் பொருளியல் பேரறிஞர் டாக்டர். பா. நடராசன் அவர்கள். இதன் எஞ்சிய பதினொரு தொகுதிகள் பின்னர் வெளி யிடப்பெறும்.

அவாய்த் தீவுகளில் அமையவிருக்கும் சைவப்பெருந் திருக் கோயிலில் முதற்கண் அம்பலவாணர் திருவுரு கல்லில் செதுக்கப் பெற்று அமைக்கப்பெற்றுள்ளது. அதைச்சுற்றிக் கருவறை கட்டப் பெற்றுள்ளது. அதன் இருமருங்கிலும் அமைப்பதன் பொருட்டு மாமல்லபுர சிற்பக்கூடத்தில் கல்லில் வடிக்கப்பெற்ற ஆறடி உயர பிள்ளையார், சுப்பிரமணியர் திருவுருவங்கள் அனுப்பப்பெற்றுள்ளன. குரு அவர்கள் அவாய்க்குத் திரும்பியபின் இத்திருவுருவங்கள் மண்ட பங்களில் அமைக்கப்பெறும். அவற்றை உள்ளடக்கித் தமிழ்நாட்டு முறையில் அமையவிருக்கும் பெருங்கோயில் ஒன்றின் வரை படங்களை அண்மையில் சென்னைக்கு வந்த குரு பார்வையிட்டார். இக் கோயிலைத் திராவிட சிற்பக்கலை முறைப்படி சீரிய முறையில் அமைக்கத் திட்டமிட்டுள்ளார்.

நெடிதுயர்ந்த தோற்றமும் சிவந்த மேனியும் நெற்றியில் திரு நீறும் சிறு குங்குமப்பொட்டும், நீண்டு வளர்ந்த பொன்னிறமான தலைமுடியும் கொண்ட அவர் அமைதியான முறையில் மென்மை யாகப் பேசி அனைவருடைய உள்ளங்களையும் எளிதில் கவரும் ஆற்றல் மிக்கவராய்த் திகழ்கிறார். வடநாட்டுக்காரரைப்போல நீண்ட காலுறைகளும் தளர்ந்த மேலுடையும் தரித்திருந்தாலும் கழுத்தில் அக்கமாலையுடன் காட்சி அளிக்கிறார்.

சைவசமயத்தை உலகமுழுவதும் பரப்பவேண்டுமென்ற நோக்கத்துடன் அமெரிக்க நாட்டினர் பலரைச் சைவசமயத்திற்குச் சமயமாற்றம் செய்யும் அந்த அமெரிக்க அருளாளர் இச் சமயம்தான் இறையடிகளை யடைவதற்குச் சரியான வழிகாட்டியாகும் என்று உறுதியாக நம்புகிறார்.

— — —

குமரிமுனையில் வள்ளுவருக்குச் சிலையும் நினைவு மண்டபமும்

கன்னியாகுமரிக் கடலிலுள்ள விவேகானந்தர் பாறையின் அருகேயுள்ள மற்றொரு பாறையின்மீது, தமிழ்நாடு அரசினரால் அமைக்கப்படவிருக்கும் மிகப் பெரியதொரு திருவள்ளுவர் திருவுருவச் சிலைக்கு, இந்தியத் தலைமை அமைச்சர் உயர்திரு மொரார்சி தேசாய் அவர்கள் 15-4-79 இல் அடிக்கல் நாட்டினர். அப்பொழுது அவர் பேசுகையில்,

"திருக்குறள் உயர்ந்த நீதிகளையும் சிறந்த ஒழுக்க நெறிகளையும் வகுத்துக் கூறுகிறது. அது எல்லாக் காலத்துக்கும் எல்லா மக்களுக்கும் உகந்ததாக அமைந்துள்ளது" என்று குறிப்பிட்டார்.

இந்த விழாவிற்குத் தலைமை தாங்கிய தமிழ்நாடு ஆளுநர் மாண்பமை பிரபுதாசுபட்வாரி அவர்கள், "திருவள்ளுவர் எல்லா மதத்தினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கருத்துக்களைத் தமது திருக்குறளில் அமைத்துள்ளார். அவர் அறிவுடைமையினை மட்டும் கற்பிக்கவில்லை. வாழ்க்கையின் பல சிக்கல்களுக்குத் தீர்வு காணும் நடைமுறை வழிவகைகளையும் விளக்கிக் கூறியுள்ளார். மது அருந்துவதை அவர் வன்மையாக எதிர்த்தார்," என்று கூறினர்.

தமிழ்நாடு முதல்வர் மாண்புமிகு ம. கோ. இராமச்சந்திரன் திருவள்ளுவர் நினைவு மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டினர்.

இங்ஙனம் வள்ளுவருக்குச் சிலை அமைக்கும் தமிழ்நாடு அரசின் முயற்சியை இந்தியத் தலைமை அமைச்சர் மொரார்சி தேசாய் பெரிதும் பாராட்டினர்.

கழகம் அமைத்த திருக்குறள் நூற்காட்சி :

இங்கு நடைபெற்ற விழாவினையொட்டிச் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர் குமரியிலுள்ள காந்தி மண்டபத்திலே அமைத்துள்ள திருக்குறள் நூற்காட்சியினை, நடுவண் அரசின் மின்துறை அமைச்சர் மாண்புமிகு பா. இராமச்சந்திரன் அவர்கள் திறந்து வைத்துப் பாராட்டினர்.

விழாத் துவக்கத்தில் தமிழகச் சுற்றுலா, செய்தித் துறைகளின் அமைச்சர் மாண்புமிகு ராம வீரப்பன் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினர். அப்போது, திருக்குறளின் சிறப்புக்களையும், அது 13 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது என்றும், பல்வேறு ஆசிரியர்களால் 30 ஆங்கில மொழிபெயர்ப்புக்கள் வெளிவந்துள்ளன என்றும் குறிப்பிட்டார்.

———

இடைக்கழி நாட்டு நல்லூர் முப்பெருவிழா

இடைக்கழிநாட்டு நல்லூரில், முறையே தமிழறிஞர்கள் சார்பில் நத்தத்தனர் விழாவும், மாம்பாக்கம் குருகுலத்தார் சார்பில் குருகுலத்தார் விழாவும், விழாக்குழுவினர் சார்பில் அருட்டிரு அழகரடிகள் முத்துவிழாவும் 15-4-79 இல் மிக்க சீரோடும் சிறப் போடும் நடைபெற்றன.

அன்று காலை 8 மணியளவில் அறப்பேரொளி கயப்பாக்கம் முத்துலிங்க ரெட்டியார் தலைமையில் நடைபெற்ற நத்தத்தனர் விழாவில் திரு. சி. என். சிங்காரவேலு, எம்.ஏ., அவர்கள் கொடி யேற்றினர். புலவர் வாசுகி, வடலூர் ஊரன் அடிகள், முத்தமிழ்க் காவலர் கி. ஆ. பெ. விசுவநாதம் ஆகியோர் உரையாற்றினர்.

அடுத்து 11 மணியளவில் நடைபெற்ற குருகுலத்தார் விழா வில் புலவர் நா. ரா. முருகவேள் அவர்கள் தலைமை தாங்கப் புலவர் பெருமக்கள் பலர் உரையாற்றினர். பிற்பகல் 4 மணியளவில் அருட்டிரு அழகரடிகள் முத்துவிழா, திருப்பணிச் செல்வன் வி. கே. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையில் மிகச்சிறப்பாக நடை பெற்றது. கவிஞர் கன்னிசாமி வரவேற்புரை நிகழ்த்தினர், புலவர் பெருமக்கள் பலரும் அறிஞர்களும் பாராட்டுரை வழங்கினர்.

இவ் விழாவில் புத்தனேரி சுப்பிரமணியம், சேலம் செயலட்சுமி ஆகியோர்க்குப் பட்டங்கள் வழங்கப்பெற்றன. தொழிலதிபர் திரு. நா. மகாலிங்கம் அடிகளார்க்குப் பொன்னுடை போர்த்தி முடிப்பு வழங்கிச் சிறப்பித்தார். அருட்டிரு அழகரடிகளார் அருளுரை வழங்கினர். நன்கொடை முயன்றவர்களுக்குப் பொன்னுடை போர்த்திச் சிறப்புச் செய்யப்பெற்றது. திரு. நா. சுப்பிரமணியம் அவர்கள் நன்றிகூற விழா இனிது நிறைவேறியது. அருட்டிரு அழகரடிகளார்க்கு எம் உளமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

கருவூர் கம்பன் கழகம்—கம்பன் திருநாள்

தமிழகத்தில் கழகம் எடுத்த முயற்சியின் விளைவாகத் திரு வள்ளுவர் கழகங்கள் ஆங்காங்கே தோன்றியுள்ள. இப்போது கம்பன் கழகங்கள் தோன்றுகின்றன. முன்னர் காரைக்குடியில் ஒரு கம்பன் கழகம் தோன்றிற்று. அதனையடுத்து இப்போது கருவூரில் ஒரு கம்பன் கழகம் தோன்றித் தமிழ்ப்பணியாற்றிவரத் தலைப் பட்டுள்ளது. இக் கழகத்தின் துவக்க விழாவும், கம்பன் திருநாளும் ஏப்ரல் 28, 29 ஆம் நாள்களில் மிகச் சிறப்பாக நடைபெற்றன. கழகத் துவக்கம் பற்றிக் கம்பன் அடிப்பொடி உரையாற்றினர். மற்றும் பல அறிஞர்கள் உரையாற்றினர். கருவூர் கம்பன் கழகத்தாரின் தமிழ்ப்பணி பாராட்டத்தக்கது.

செய்திகளும் குறிப்புக்களும்

பாவேந்தர் பாரதிதாசன் விழா

29—4—79இல் சென்னைக் கலைவாணர் அரங்கில் பாவேந்தர் பாரதிதாசன் விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்குக் கவிஞர் சுரதா அவர்கள் தலைமை தாங்கினர். தவத்திரு குன்றக்குடி அடிகளார் விழாவைத் துவக்கி வைத்தார்கள். மாண்புமிகு க. இராசாராம் அவர்கள் தலைமையில் கருத்தரங்கு நடைபெற்றது. மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி ச. மோகன் அவர்கள் தலைமையில் நாவலர் நெடுஞ்செழியன், நெ. து. சுந்தர வடிவேலு, கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் சிறப்புச் சொற்பொழிவாற்றினர். மாண்புமிகு கல்வி அமைச்சர் செ. அரங்க நாயகம் அவர்கள் நிறைவு விழாச் சொற்பொழிவு ஆற்றினர். அரசுக் கலைஞர், கலைமாமணி திருமதி வைசயந்திமாலாவின் நாட்டிய நிகழ்ச்சியும் நடைபெற்றது.

டாக்டர் இராசா சர் முத்தையா செட்டியார் அவர்களுக்குப் பாராட்டுவிழா

அண்ணாமலைப் பல்கலைக்கழக இணைவேந்தர், டாக்டர் இராசா சர் முத்தையா செட்டியார் அவர்கள் தமிழுக்கும் தமிழிசைக்கும், கல்விக்கும் கடந்த 50 ஆண்டுகளாக ஆற்றிவரும் அரும்பணிகளைப் பாராட்டு முகத்தான் 29—4—79 மதுரைத் தமிழ் இசைச் சங்கத்தின் சார்பில் இராசா முத்தையா செட்டியார் மன்றத்தில் ஒரு பாராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்குச் சிலம்புச் செல்வர் ம பொ. சிவஞானம் தலைமை தாங்கினர். தமிழக முதல்வர் மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள், இராசா சர் முத்தையா செட்டியார் அவர்களுக்குத் "தமிழிசைக் காவலர்" என்னும் பட்டத்தினை வழங்கிப் பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார். புகழ்பெற்ற கவிஞர் அறுவர் பாராட்டுக் கவிதைகள் வழங்கினர். டாக்டர் இராசாசர் செட்டியார் அவர்களின் தமிழ்ப்பணி, தமிழ் இசைப்பணி, கல்விப்பணி, ஆகியன போற்றுதற்குரியன. திரு. செட்டியார் அவர்கட்குக் கழகத்தின் சார்பில் எம்முடைய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மதுரைத் தமிழிசைச் சங்க 5 ஆம் ஆண்டு இசை விழா

மதுரைத் தமிழிசைச் சங்கத்தின் 5 ஆம் ஆண்டு விழா 29—4—79இல் தல்லாக் குளத்தில், இராசா முத்தையா மன்றத்தில் நடைபெற்றது. சிலம்புச் செல்வர் ம. பொ. சிவஞானம் அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினர்கள். தமிழக முதல்வர் மாண்பு மிகு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் விழாவினைத் தொடங்கி வைத்தனர். வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு S. D. சோம சுந்தரம் அவர்கள் இசை விழா மலரை வெளியிட்டுச் சொற்பொழி வாற்றினர். மதுரை மாநகராட்சித் தலைவர் மேதகு. எஸ். முத்து

அவர்கள் வாழ்த்துரை வழங்கினர். 29—4—79 முதல் 7—5—79 முடிய, தேவார இன்னிசை, கவியரங்கம், கருத்தரங்கம், இசைவாணர் களின் இன்னிசை அரங்கு நாடகம், நாடக நாட்டியம், நகைச்சுவை நாடகம் என்று பல்வேறு கலை நிகழ்ச்சிகளைக் கொண்டதாய் மிகச் சிறப்பாக நடைபெற்றது. இங்ஙனம் தமிழகத்தின் தலைநகரில் மட்டு மன்றி மதுரையிலும் தமிழிசையினை வளர்த்து வரும் இராசா சர் முத்தையா செட்டியார் அவர்களின் தமிழிசைத் தொண்டினைப் பாராட்டுகிறோம்! வளர்க தமிழிசை!

தமிழ் கா. சு. நினைவு இலக்கிய விழா

குழித்தலைத் தமிழ் கா. சு. நினைவு இலக்கியக் குழுவினர் தமது 15 ஆண்டு நினைவு விழாவினை 1979 மே 5, 6 ஆம் நாள்களில் சிறப்புற நடத்தினர்.

முதல் நாள் விழாவில் பாவலர் பழனி இளங்கம்பன் அவர்கள் தலைமையில் பாட்டரங்கம் நடைபெற்றது. அடுத்து நடந்த பாராட்டு விழாவிற்கு மருத்துவ மாமணி எம். சிவக்கண்ணு தலைமை தாங் கினர். திருக்குறள் நினைவுக் கலையேந்தல் பதின்கவனகர் (தசாவ தானம்) பெ. இராமையா அவர்கட்குப் பாராட்டுப் பட்டயம் வழங்கிச் சிறப்பிக்கப்பட்டது.

இரண்டாம் நாள் தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் தலைமையில் பட்டிமன்றமும், டாக்டர் சக்தி பெருமாள் அவர்கள் தலைமையில் கருத்தரங்கமும், இரவு அருட்பா, சிலப்பதிகாரம் பற்றிய இசைக்கலை நிகழ்ச்சியும் நடைபெற்றன. தமிழறிஞர் கா. சு. பிள்ளை யவர்களின் நினைவு அஞ்சல் தலை வெளியிடவேண்டுமென மைய அரசை வற்புறுத்தும் தீர்மானம் ஒன்றும் இவ்விழாவில் நிறைவேற் றப்பெற்றது குறிப்பிடத்தக்கது.

தமிழவேள் உமா மகேசுவரனார் படத்திறப்பு

6—5—78 அன்று தஞ்சையில் தமிழவேள் பி. டி. இராசன் அவர்களின் மகனார் திரு. பழனிவேல் ராசன் அவர்கள் தலைமையில் வழக்கறிஞர்கள் மாநாடு நடைபெற்றது. இம் மாநாட்டில் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தை நிறுவியவரும், சிறந்த வழக்கறிஞரு மான தமிழவேள் உமா மகேசுவரனார் அவர்களின் உருவப்படம் திறந்து வைக்கப்பெற்றது. திரு. ஏ. டி. பன்னீர்ச் செல்வம் அவர் களின் உருவப்படமும் திறக்கப்பட்டது. மாநாட்டில் 19 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கிழக்கு செருமனியில் உலக சமக்கிருத மாநாடு

அனைத்து நாட்டுச் சமக்கிருத அறிஞர் குழுவின் சார்பில் சனநாயகக் குடியரசு நாடாகிய கிழக்கு செருமனியில் மேத்திங்கள் 23 ஆம் நாள் முதல் 30 ஆம் நாள் முடிய உலக சமக்கிருத மாநாடொன்று நடைபெற இருக்கிறது. ஏறக் குறைய 200 அறிஞர்களும் இந்திய வரலாற்றாசிரியர்களும் இம் மா நாட்டில் பங்கு கொள்வர் எனவும், ஏறக்குறைய 160 ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப்படுமெனவும் கூறப்படுகின்றது.

பெர்லின் நகரிலுள்ள ஹாம்போல்ட் பல்கலைக் கழகத்தில் பணியாற்றும் இந்திய வரலாற்றாசிரியர்களால் இம் மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, அனைத்து நாடுகளின் கல்வி அறிவியல் பண்பாட்டு இயக்கத்தினர் (Unesco) அறிவிக்கின்றனர்.

தொழிலதிபர் T. S. சீனிவாசன் மறைவு

புகழ் பெற்ற T. V. S. நிறுவனத்தின் இயக்குநரும், காலஞ்சென்ற T. S. கிருட்டிணன் அவர்களின் இளவலுமான திரு. T. S. சீனிவாசன் அவர்கள் 30—4—79இல் தமது 57ஆம் அகவையில் திடுமென காலமானர் என்ற செய்தியறிந்து வருந்துகிறோம். மறைந்த தொழிலதிபர் அவர்களின் குடும்பத்தார்க்கும் நண்பர்கட்கும் எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

மறைமலையடிகள் நூல்நிலைய வளர்ச்சிக்கு நன்கொடை

(முன் பரல்-அ, சuஅ ஆம் பக்கத் தொடர்ச்சி)

புலவர் சிவசங்கரன், மாயூரம்	100	00
திரு. ச. அரங்கராசன் M. A., மயிலை	20	00
திரு. பூ. ஆலாலசுந்தரஞ் செட்டியார், தாம்பரம்	50	00
திரு. வ. சுப்பையா பிள்ளை	10	00
,, ஆ. சுப்பையா பிள்ளை	5	00
திரு. K. நம்பியாரூரன் எம்.ஏ., பி.எச் டி.	100	00
Mrs. G. Rajamanickam M.A. Principal, Tirunelveli	100	00

மதிப்புரை

புதுமைக் குறள்

[ஆசிரியர்: டாக்டர் சொ. சிங்காரவேலன்; வெளியீடு; ஞானவேல் பதிப்பகம், 2, மாயூரநாதர் சந்நிதித்தெரு, மாயூரம் விலை: ரூ. 2-00.]

'புதுமைக்குறள்' என்னும் இச் செய்யுள்நூல் பெரும்பாலும் திருக்குறள் அமைப்பு முறைகளைத் தழுவி அமைந்துள்ளது. திருக்குறள் உலகப் பொதுநூல். இப் புதுமைக்குறள் சிறப்பாகத் தமிழ் நாட்டின் சீர்திருத்தம் நோக்கியெழுந்துள்ளது. ஆயினும் ஆசிரியரின் பொதுமை நோக்கம் நூலின்கண் பளிச்சிடுகின்றது.

'இறை வாழ்த்து முதல்' மனச்சான்றின் மாண்பு' ஈறான 108 அதிகாரங்கள் இந் நூலில் இடம்பெற்றுள்ளன. அவை பாயிரம் (1—8) கல்வி—கலை (9-37), அரசு (38—69), வாழ்வு (70—108) என்னும் நான்கு இயல்களாகப் பாகுபடுத்தப்பட்டுள்ளன. குடியரசுமாட்சி, தேர்தல் நெறி, கையூட்டொழிப்பு முதலியனவாக இன்றைய தலைமுறையினர்க்கு ஏற்ற புதிய கருத்துக்களை விளக்குகிறது இந் நூல்.

ஆசிரியர் அவர்கள் தாம் கண்டும் கேட்டும் பட்டறிந்து ஊகித்துணர்ந்த செவ்விய கருத்துக்களை நம் தமிழ்மக்களின் முன்னேற்றத்தின் பொருட்டு எளிதில் மனங்கொள்ளத்தக்க செய்யுள் நூலாக உருவாக்க வேண்டுமென்று திட்டமிட்டு இந் நூலைக் குறட்பாவில் அமைத்துள்ளார். புதுமைக்குறள் என்னும் பெயருக்கேற்பக் கருத்துக்களில் மட்டுமன்றி யாப்பு முறையிலும் சில புதுமைகள் காணப்படுகின்றன. மாயூரம் அ. வ. அ. கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் தி. வ. காந்திமதிநாதன் அவர்கள் இந் நூலுக்குச் சீரிய அணிந்துரை வழங்கியிருப்பது மிகவும் போற்றுதற்குரியது.

திருக்குறளில் இடம்பெற்றுள்ள 'சூது' என்னும் பெயரில் ஓர் அதிகாரமும் 'இல்வாழ்க்கை', 'துறவு' ஆகியவற்றின் பொருளமைந்த 'மனைமாட்சி', 'மெய்த்துறவு, ஆகிய அதிகாரங்களும் இன்னபிறவும் இந் நூலில் இடம்பெற்றுள்ளன. சூது என்னும் அதிகாரத்தில் 'பரிசுச் சீட்டு', 'குதிரைப் பந்தயம்' ஆகியவை இடம்பெற்றிருக்கலாம். கையடக்கவடிவில் அழகுற அச்சிடப்பட்டிருக்கும் இந் நூல் புதிய உலகு காணவிழையும் சிந்தனையாளர்கட்குப் பெரிதும் பயன்படும்.

பெரிய புராண ஆய்வுரை மூன்றும் தொகுதி—சம்பந்தர்

[ஆசிரியர்: மறை திருநாவுக்கரசு, மறைமலையடிகள் பதிப்பகம், பி. 96, சவகர் நகர், அகரம், பெரம்பூர், சென்னை-82 விலை : உரு. 10-00.]

இந் நூலின்கண் சம்பந்தர் பாடல்களுக்கு அரிய விளக்கங்கள் தரப்பட்டுள்ளன. சம்பந்தர் கால முதல் இந் நாள் வரையில் உள்ள சமயநிலை, மொழி நிலை முதலியன நன்கு ஆராயப்பட்டுள்ளன. கருத்து வளமிக்க ஆராய்ச்சி நூல். ஆராய்ச்சியாளர்க்கு நல்விருந்தாய் அமைந்துள்ள அரியநூல் எனில் மிகையாகாது.

திருக்குறளும் இந்திய அறநூல்களும்

[ஆசிரியர்: திருக்குறள்மணி க. த. திருநாவுக்கரசு பாரி நிலையம். விலை : ரூ. 4-20.]

இது மதுரைப் பல்கலைக் கழகத்தில் 'திருக்குறளும் உறுதிப் பொருள்களும்' என்னும் பொருள் பற்றிய கருத்தரங்கில் இந் நூலாசிரியர் படித்த ஆய்வுக் கட்டுரையின் விரிவான ஆக்க நூலாகும். இதன்கண் முப்பொருள் பற்றிய ஆய்வு எட்டு இயல்களாகப் பிரித்து உரைக்கப்படுகின்றது. இதனால் திருக்குறளின் மாண்பு தெளிவு படுத்தப்படுவதுடன், பிற அற நூல்கள் பற்றி அறிந்து கொள்வதற்கு இந் நூல் பயன்படும்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்திற்காக, சென்னை, 80, பிரகாசம் சாலை, அப்பர் அச்சகத்தில் திரு. வ. சுப்பையா அவர்களால் அச்சிடப்பெற்றது.
ஆசிரியர் : வ. சுப்பையா.

கழக நிலையங்களில் கிடைக்கும்

பிற பதிப்பாளரின் புதிய வெளியீடுகள்

பதிவு எண் : M. 4899

அப்பர் அச்சகம், சென்னை-1.